# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு வைகாசிமாதம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 20-ம் இலக்கம்


## ஏழைகளின் சம்மனசாகிய மாட்டீன் தெ பொறஸ்

## திருச்சபையின் புதிய அர்ச்சியசிட்டர்

ஞேமாபுரி, அர்ச் பேதுருவான வர் மகாலயத்திலே இம்மாதம் 6-ந்திகதி ஞாயிறன்று முத் மாட்டீன் தெ போறஸுக்கு அர்ச்சிய சிஷ்டபட்டம்சூட்டும் திருவைப வங்களின்போது, கனறிதீவுகளி லிருந்து போயிருந்த பதினெரு வயதுடைய அந்தோனி பெறெஸ் கபிறேறு எனும்பாலியன் அம் மகாலயத்தின் மேடைஒன்றின் மேல் அமர்ந்திருந்தான். இற் றைக்கு ஆறுவருடங்களின் முன்னே அர்ச். மாட்டீன் தெ பொறெஸின் சலுகையால் இவன் புதுமையாகக் குணமடைந்ததை யிட்டு ஆங்கு ஒருகண்ணியமான இடத்தை வகிக்கலாயினன்.

அப்போது இவனுடைகால் ஒன்று அழுகிப்போகவே, அதனை வெட்டித் துண்டித்துவிடவேண் டுமென்று சத்திரவைத்தியர்கள் ஆலோசனைகூறினர்கள். ஆனல், அர்ச். மாட்டீன் தெபொறெஸின் திருப்பண்டம்ஒன்றை அழுகிய காலில்வைத்து அவர்சலுகையை இரந்துகொள்ளவே பாலியனின் கால் குணமடையலாயிற்று.

அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டுவ தற்கு ஆவசியகம்வேண்டிய இரு புதுமைகளில் இந்தஆரோக்கிய மும் ஒன்ருகும். மற்றப்புதுமை 1948-ம்ஆண்டிலே பரக்குவே நாட்டில் வசித்திருந்த 87 வய துடைய டொரூேத்தியா கபா லரூே எஸ்கலாவந்தேஎனும் வித வைக்குச் செய்யப்பட்டதாகும். கவர்ச்சிகரமான திருச்சடங்குக ளுக்குச் சமுகமளித்திருந்த கருதி ஞல்மார், மேற்றிராணிமார்களில் ஆபிரிக்க கருதிஞலாகிய றுகம் ப்வாஆண்டகையும் அடங்கியிருந் தார்,

அருளப்பபாப்பரசர் வெண்மை —தங்க வர்ணமயமான சிம்மாச னத்தின்மேல் வீற்றிருந்து, "பரி சுத்தமும், கண்ணுக்குத் தோன் ருததுமான பரமதிரீத்துவத் திற்கு மகிமையுண்டாகும்படி யாக ...... முத். மாட்டீனை ஓர் அர்ச்சியசிஷ்டராக நிர்ணயித்து, வரையறுத்து, அர்ச்சியசிஷ்டவர் களின் அட்டவணையில்வரைந்து, அவரதுஞாபகம் சாதாரணதிருச் சபையிலே வருடந்தோறும் பத்தி வைராக்கியத்துடன் கொண்டா டப்படவேண்டுமென ஆஞ்ஞா பிக்கிரூேம்" என்று கம்பீரமாக மொழியவே அம்மகாலயமுழுவ தும் ஆனந்தக்கூச்சலுக்குமேல் கூச்சல்எழலாயிற்று.

திருச்சபைக் குருசிரேஷ்டர்க ளின் ஆடம்பரமான ஊர்வலம் ஒன்றிலே பாப்பரசர் தமதுசிவி கைமீது மகாலயத்தில்பிரவேசித் தார். அப்போது அவர் தமது இடதுகரத்திலே புதியஅர்ச்சிய சிஷ்டவரினதும், உலகமுழுவதும் பரந்துபிரகாசிக்கின்ற அவரது உத்தமதொண்டுகளினதும் சின்னமாக எரிகின்ற ஒருமெழுகு வர்த்தியைக் கொண்டுசென்ருர். அங்குசமுகமாயிருந்த கருதிஞல் மார் ஒவ்வொருவரும், சந்நியாச சபைகளின் பிரதிநிதிகளும் அதே மாதிரியான மெழுகுவர்த்திகளைக் கொண்டுசென்ருர்கள். "பாப் பரசர் நீடூழிவாழ்க" என்ற ஆர்ப் பரிப்புகள் அநேகபாஷைகளில் மேகமுழக்கம்போன்று ஒலித்து, சிஸ்ரைன் பாடகர்குழாமபடித்த கீதங்களின்ஓசையையும் அமுக்கி விடலாயின.

1579-ம்ஆண்டு ஓர் ஸ்பானிய போர்வீரருக்கும், நீகிரூேசாதித் தாய்க்கும்பிறந்த கலப்புச்சாதி யினரான மாட்டீன் தெ போற ஸை ஓர்அச்சியசிஷ்டவராகப் பிர கடனஞ்செய்யுமாறு கருதிஞல் லருவோஞ ஆண்டகை மும்முறை பாப்பரசரை வேண்டிநின்ருர். அதனைத்தொடர்ந்து அர்ச்சிய சிஷ்டவர்களின்பிரார்த்தனையைப் பாடுவதிலேஅங்குசமுகமாயிருந்த பக்தர்குழாம் ஒன்றுசேரலா யிற்று. அந்தமாபெரும் பக்தர் குழாமுக்குமேலாக உயரத்திலே அர்ச். மாட்டீனின் சிவியபரிமாண முள்ள சித்திரம்ஒன்றைக் கொண்ட பெரியகொடிஒன்று பறந்துகொண்டிருந்தது.

பாப்பரசர்நிறைவேற்றிய திவ் வியபூசையின்போது முன் சொன்னகருதிஞல் ஆடம்பரஊர் வலமாக அவரதுசிம்மாசனத் தண்டைசென்று ஒவ்வொன்றும் 60இருத்தல் நிறைகொண்டதும், புதியஅர்ச்சியசிஷ்டவரின் படங் களைத் தாங்கியதுமான ஐந்து மெழுகுவர்த்திகளை அவருக்குத் தட்சணைவைத்தார். தொமினிக்கு

[ தொடர்ச்சி 5-ம் பக்கம் ]

### 2-வது வத்திக்கான் பொதுச்சங்கம்

இச்சங்கம் வருகிறஐப்பசிமாதம் 11-ந்திகதி ஆரம்பமாகும். இத் திகதியை நிர்ணயித்தகாரணம் 431-ம்ஆண்டு இத்திகதியிலேயே எபேசுஸ்சங்கம்கூடி "மரியாய் தேவனின்தாய்"என்ற உண்மை யைக் கத்தோலிக்கமக்களின் விசு வாசசத்தியமாகப் பிரகடனஞ் செய்தது. இதற்குமுன் நடை பெற்ற பொதுச்சங்கம் 1869-ம் ஆண்டிலேயேயாகும். திருச்சபை வரலாற்றின் இருபதுநூற்ருண்டு களிலே இச்சங்கம் 21-வது பொ துச்சங்கமாகவும், வத்திக்கானில் நடைபெறும் இரண்டாவது பொதுச்சங்கமாகவும் இருக்கி றது. ஏறக்குறைய நூறுவருடங் களுக்குப் பொதுச்சங்கம் நடை பெறவில்லையென்பது குறிப்பிடத் தக்கது. இச்சங்கம் இரண்டு மாதங்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1869-ம் ஆண்டு நிகழ்ந்தசங்கம் ஒன்பது மாதங்கள் நீடித்திருந்தது.

### அமெரிக்க மாது சுவீகரித்த

## இந்திய குருமாணவர்

குருமடத்திலே தான் செலவு பொறுத்துப் பரிபாலித்துவந்த குருத்துவமாணவர் ஒருவரின் குருப்பட்டாபிஷேகத்துக்குச் சமுகமளிக்குமாறு இந்தியாவுக்கு வந்திருந்த ஓர்அமெரிக்கசீமாட்டி அதற்குப்பிரசன்னமாய் இருந்த பின் சமீபத்திலே பம்பாயிலிருந்து பிரயாணமாகியிருக்கின்ருள். ஐக்கியஅமெரிக்கதேசத்தில் மில்வாக்கிநகரைச்சேர்ந்த 58வய துடைய செல்விமஜோறியே தெலெரூேஎன்ற இந்தச்சீமாட்டி அங்கு நியூயோர்க்நகரிலிருந்து தூத்துக்குடிவந்துசேர்ந்து வண. எஸ். பிரான்சீஸ் சுவாமியாரின் குருப்பட்டாபிஷேகத்திற்குச் சமுகமாயிருந்தாள். இந்த அபி ஷேகம் தூத்துக்குடி, திருஇரு தயஆண்டவரின் ஆசனக்கோவி லிலே மகாவந். தோமஸ் பர்ஞண் டோஆண்டகையால் நிறைவேறி யது. இந்தச்சீமாட்டி வருடந் தோறும் புதியகுரவரின் வேத சாஸ்திரபடிப்புக்கென்று கிரம மாக வருடந்தோறும் ஆயிரம் ரூபாவரை அனுப்பிவைத்ததும் தவிர, இடையிடையே வேறு நன்கொடைகளும் அனுப்பிவர லாயினள். வண. பிரான்சீஸ் சுவாமியார் திருச்சிராப்பளி யிலுள்ள அர்ச். சின்னப்பர்குரு மடத்திலே வேதசாஸ்திரபடிப் பைப் பூர்த்திசெய்தார்.

## உலகின்மகாஉந்நதமான

### எவறெஸ்ற் சிகரத்திலே...

இமையமலையிலே உலகின் மகா உந்நதமான எவறெஸ்ற்சிகரத்தின் உச்சியில் வைக்கப்படுமாறு 23-ம் அருளப்பபாப்பரசர் பனிமயமாதா வின் விருதுஒன்றை அனுப்பிவைத் திருக்கின்ருர். இந்தமகா உந்நத மான மலைச்சிகரத்தில் ஏறிக்கொண் டிருக்கும் இந்தியஆராய்ச்சிக்கோஷ் டியின் தலைவரும், ஒருகத்தோலிக்கரு மான மேஜர்ஜோன் டி டயஸ்அவர் களுக்குப் பாப்பரசர் இந்தவிருதை அனுப்பியிருக்கின்ருர். இந்தமலை யேற்றக்காரருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள ஞாபகவஸ்துகள்பனிமய மாதாவின் இரண்டாவதுவிருதுஒன் றும், ஒருசிலுவையும், ஒருசெபமாலை யுமாகும். மேஜர்டயஸ்அவர்களும், பதினன்கு அங்கத்தவர்களைக் கொண்ட இந்தமலையேற்ற ஆராயச் சிக்கோஷ்டியில் மற்றெருகத்தோ லிக்கரான கப்ரின் எம். ஏ. சோர்ஸ் அவர்களும் பம்பாயிலே சந்தாக்குரு ஸிலுள்ள திருஇருதயநாதரின் விசா ரணைப்பங்கைச் சேர்ந்தவர்கள். கப் ரின் சோர்ஸ் இந்தக்கோஷ்டியில் அடங்கியுள்ள இருடக்றர்மாரில்ஒரு வர். இந்தமலையேற்ற ஆராய்ச்சிக் கோஷ்டி இந்தியமலையேற்ற ஸ்தா பனத்தின் ஆதரவிலே சென்றுள் ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மேற்றிராசன

# கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் 2-வது மாநாட்டில்

## திரு. ஏ. எஸ். எவ். பெரேராவின் தலைமையுரை

இல்லறகத்தோலிக்கர் கலந்தாலோசிக்கக் கூடுதலான சந்தர்ப்பம் அருளப்படுகின்றனர். இதுவே 1955-ம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்டுள்ள சிறந்தமுன்னேற்றம் என்பதை நான் அவதானிக்கிறேன். தமது மேற்றிராசனத்தைச் சேர்ந்தமக்கள் எப்படிச் சரியானவழிகளில் சிந்திக்கின்றனர்? பொதுசன அபிப்பிராயத்தை எப்படிச் சரியானவழியில் திருப்புகின்றனர்? என்பதை அறிய எமது மேற்றிராணியாண்டகை அவர்கட்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

"விசுவாசிகள் பலிபீடத்தின்முன் அமர்ந்து வணங்குவதும், பிரசங்க மேடையின் கீழமர்ந்து கவனிப்பதுமாகிய இருதிருவழிபாடுகளை உடையவர்கள்" என்று கருதினால் ஆண்டகை ஒருவர் ஒருகாலத்தில் கூறினார். ஆனால், இப்போது நாம் அக்காலத்தவரினும் பார்க்க நன்கு முன்னேறியுள்ளோம். அதனால் "யேசுக்கிறீஸ்துநாதரின் போதகத்தைப் பரப்புவதிலே விசுவாசிகளின் பங்கு என்ன? என்பதைத் திருச்சபை திரும்பவும் புனராலோசனை செய்கின்றது; இல்லறகத்தோலிக்கர் அப்போஸ்தொலிக்கதொண்டில் எப்படிப் பங்கு பெறவேண்டும்? என்னென்ன கருமங்களை ஆற்றவேண்டும்?" என்று தீர்மானிப்பதே வத்திக்கானில் கூடவிருக்கும் திருச்சபைப் பொதுச்சங்கத்தின் முக்கியசெயல்களில் ஒன்றாயிருக்கும் என்பது உண்மை.

**இல்லற கத்தோலிக்கர் என்றால் யார்?** இக்கேள்விக்குப் பலவிதமான விடைகள் இருக்கலாம். எனினும்நான் எனது சொந்த அபிப்பிராயத்தைக் கூற விரும்புகின்றேன். ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல் என்ற தேவதிரவிய அனுமானங்களைப்பெற்ற ஒருகத்தோலிக்கனாயிருந்து சீவிக்கவேண்டிய விதமாகச் சீவிப்பவனே ஒரு இல்லற கத்தோலிக்கன் என்று நான் சொல்வேன். இத்தேவதிரவிய அனுமானங்கள் ஆத்துமத்தில் அழியாதமுத்திரைகளைப் பதிக்கின்றனவென நான் எனது பாடசாலைநாட்களில் படித்திருக்கிறேன். நீங்கள் என்ன அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறீர்களோ அறியேன். ஆனால், நான் "எங்களுடைய வஸ்திரங்களில் சலவைத்தொழிலாளி இடும் குறிபோன்ற ஒன்றெனவே நீண்டநாட்களாகக் கருதியிருந்தேன். ஆம், அவைகள் கிறீஸ்துநாதருடைய அதிகாரங்கள்சிலவற்றை எங்களுக்குக் கொடுக்கின்றன" வென்ற உண்மையை நாம் உணரத் தொடங்கியுள்ளோம்.

ஆகவே, ஞானஸ்நானம் கிறீஸ்துநாதரோடும், அவர்மூலமாகவும் கடவுளை ஆராதிக்கும் உரிமையை எமக்குக் கொடுக்கிறது. உறுதிப்பூசுதல உலகில் நாம் கிறீஸ்துநாதரைக் கண்டுபாவித்து, அவருக்குச் சாட்சியாயிருக்கும் உரிமையை நமக்கு வழங்குகிறது. அவைகள் திருச்சபைத் தலைவர்களின் அதிகாரங்களை எமக்கு வழங்காவிடினும், குருப்பிரசாதிகளின்கடமைகள் எமக்குமுண்டு என்பது தவறாகாது. இல்லறகத்தோலிக்கராகிய எமக்குப் பிறர்சிநேகத்தின்நிமித்தம் செய்யவேண்டிய கடமைகள்சில உண்டென்பதை [illegible]ணருகின்றேன். இதனைப்பற்றிப் பிரதமபேச்சாளர் அனைவர்க்கும் விரிவாகவிளக்குவார்.

இயற்கைக்குமேலான தயை அல்லது அன்பு இல்லாவிட்டால் நாம் ஒன்றுமற்றவரென்று அர்ச். பவுல் சொல்லுகிறார். நற்செயல்களின்—விசேஷமாக இல்லற அப்போஸ்தலத்துவத்தின் ஊற்றாயிருப்பது பிறர்சிநேகம். இது விஷயமாய்க் கொழும்பு அதிமேற்றிராணியார் அவர்கள் இதுபோன்ற ஒருகத்தோலிக்க மகாநாட்டில் நிகழ்த்திய உரையே எனது வாழ்க்கையில் நான் கேட்ட அதிகம்சிறந்த சொற்பொழிவாகும். எமது அயலாரை நாம்நேசிப்பதில் மூன்றுபடிகள் இருக்கின்றன என்று அவர்கூறினார். "எம்மைப்போன்று எமது அயலாரை நாம்நேசிப்பதே முதலாவதும், குறைந்ததுமான படியாகும் நாம் கிறீஸ்துநாதரை நேசிப்பதுபோன்று அயலாரைநேசிப்பது இரண்டாவதுபடியாகும். கிறீஸ்துநாதர் எம்மை நேசிப்பதுபோன்று நாம் எமது அயலாரை நேசிப்பது மூன்றாவதும், அதிஉத்தமமுமான படியாகும்; இதுவே கிறீஸ்துநாதர் தமது கடைசி இராப்போசனத்தின்போது கேட்டுக்கொண்டதாகும். எனவே, இல்லறகத்தோலிக்கனின் அப்போஸ்தலிக்கதொண்டு கிறீஸ்துநாதருக்காக நாம் எமது அயலாரை நேசிக்கும் செயல் என்பது இதனால் பெறப்படுகின்றது.

வேதகலாபனை நாட்களில்வாழ்ந்த எமது திருச்சபைக்குரவரில் ஒருவராகிய அர்ச். யோண் கிறிசோஸ்ரோம் எழுதிய கட்டுரைஒன்றில் கூறப்படுவதாவது: "எமதுமுன்னோர்கள் ஒருவர் ஒருவரை நேசித்தவிதமே வேதவிரோதிகளான ரோமைச் சக்கரவர்த்திகளின் மனமாற்றத்துக்கு முக்கியகாரணமாக இருந்திருக்கவேண்டும். அக்காலம் எமதுகாலத்தை யொத்ததால் அர்ச். யோணின் உரை எங்கட்கோர் விசேஷ செய்தியாக அமையும்."

அவர் ஓரிடத்திற் குறிப்பிடுவதாவது: "இது என்னுடைய அலுவலல்லஎன்று எவரும் சொல்லாதிருப்பார்களாக. ஒருவன் தன் அயலானை நேசிப்பதில் அக்கறையற்றிருந்தால், தன் அயலவனின் ஆன்மநன்மைக்காகப் பாடுபடாதிருந்தால், அவன் தன்கருமத்தில் நல்லமுடிவை அடையான்." இன்னோரிடத்தில் அவர், "கிறீஸ்துநாதர் தமது செய்தியை மக்களிடத்திற் பரப்புபவராக எம்மை இந்தஉலகத்தில் வைத்திருக்கிறார். அச்செய்தியைப் பரப்புதற்குப் பேச்சு அவசியமற்றது. நாம் உண்மையான கத்தோலிக்கராகச் சீவித்தால் இவ்வுலகத்தில் நாம்மனந்திருப்பவேண்டிய வேதவிரோதி ஒருவனும்இரான்" என்று கூறுகின்றார்.

இல்லற அப்போஸ்தலத்துவம் பத்திக்கிருத்தியங்களை அனுசரிப்பதோடுமாத்ரம் நின்றுவிடக்கூடாது. தனது நன்முன்மாதிரிகையால் கிறீஸ்துவின்போதகத்தை உலகிற்குஎடுத்துக்காட்டவேண்டும். இலங்கையில் நாம் எவ்வளவுதூரம் முன்னேறியுள்ளோம்.

எம்மோடு வசிப்பவரில்அநேகர் அப்போஸ்தல தொண்டைப்பற்றிய எண்ணத்தைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளார்கள் என்பதைக் காணும்போது வருந்துகின்றோம். உண்மையிலே எமது பிறர்சிநேகம் போதியதன்று. நாமே எம்மைச் சோதனைசெய்து, நாம்வெளியுலகிற்குக் கவர்ச்சியுள்ளவராக எம்மை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற நமது பரிசுத்தபிதாவின் வார்த்தையை நன்கு பின்பற்றி நடப்போமாக.

கடைசியாக எமது அரசரும், முன்மாதிரிகையுமான கிறீஸ்துநாதர் பூரண அதிகாரத்தைக்கொண்ட ஒருகுரவராவர். ஆனால், அவருடைய தாயாரான மரியம்மாள் ஒரு இல்லறப் பெண்மணியாவாள். எம் அனைவருக்கும் அவள் தாயாரானபடியால் சிலமணித்தியாலங்களுக்கு அவளை எமது உடைமையாக்க மகாவல். மேற்றிராணியாண்டவரும், குருப்பிரசாதிகளும் மறுக்கமாட்டார்களென நான் எண்ணுகின்றேன். இன்றையநிகழ்ச்சிகள் முடிவடைந்ததும் அவளைப்பத்திரமாக ஆண்டவரிடம் ஒப்படைப்போம் என்பதற்கு உறுதிகூறுகிறேன்.

# வையம் போற்றும்

## வைகாசித் திங்கள்

வைகாசித் திங்கள்என்றால் வையகத்தில் கண்கொள்ளாக்காட்சி! வையகம்அளிக்கும் இயற்கைவனப்புத்தான் என்னே! வானமேகங்கள் மாசுமறுவின்றிக் காட்சியளிக்கும். ஆலும் அரசும், வேம்பும்தும்பையும், வேறு மரங்களும் இலைசொரிந்து இளந்தளிர் பரப்பிநிற்கும். மாவும்,பலாவும் மதுரமானகனிகளை மானிலத்தோர்க்கு மகிழ்வாய்க்கொடுக்கும். வண்டும், தும்பியும நறுந்தேனை நாடிச்சென்று வண்ணச்சோலைகள்தோறும் செய்யும் ரீங்காரஒலியும், படைத்தோனைப்பார்த்துப் பணணிசைக்கும் புள்ளினங்களின் இன்னோசையும் சேர்ந்து வானைப்பிளக்கும். முல்லைமலர், ரோசாமலர் பரந்த மணத்தைப் பாரெங்கும்பரப்பும். சோலைதன்னில் வீசும்தென்றல் தெவிட்டாத இன்பத்தைஈயும்.

கற்பனையா? இல்லை. கட்டுக்கதையா? இல்லை. முற்றிலும்உண்மை. பாரெங்கும் பரமகன்னியைப் புகழ்ந்து போற்றுகின்றது. கம்பன்கற்பனைக்கெட்டாத கன்னியைப் பரமனின்குமாரியென்றும் சுதனைச்சுமந்த தாயென்றும், இஸ்பிரீத்துவின் பத்தினியென்றும், பரலோகபூலோக இராணியென்றும் பாராட்டுகிறது பாருலகு. முட்கள்நடுவில் ரோசாபோலும், சேற்றில் மலர்ந்தசெந்தாமரைபோலும் தோன்றினாள் இப்பூவில். மலர்களுக்கெல்லாம் மலராய் உலகோர்க்குஉயிராய் உதித்தாள் உதயதாரகை. பெற்றதாயிலும் மேலானதாயாய், கரைதெரியா ஓடம்போலக் கலங்குவோரின் கலங்கரைவிளக்காய், திக்கற்றோர் திசையாய், திங்களைப்பாதத்தில் தாங்கியவளாய், தினகரன்உடையை அணிந்தவளாய், செங்கரத்தில்செபமாலைஏந்தியவளாய்க் காட்சிதந்தாள். வரப்பிரசாதம் வழிந்தோடும் வாய்க்காலாய், மட்டற்ற மகிமையின் பாத்திரமாய் விளங்குகின்றாள்.

பரமஇராக்கினி பாத்திமாவிலே, லூர்துபதியிலே, மற்றும்இடங்களில் பரமனின்தூதைப் பாருக்கறிவிக்க வந்தபோது, தூயவெண்ணுடை பூண்டு, நீலநிறக்கச்சு அணிந்து, செங்கையில் திருமாலைபணிந்து பரலோகத்தைநோக்கியவண்ணம் காட்சியீந்து பாவிகளுக்காகச்செபிக்கவும், தபம் செய்யவும்,செபமாலைஓதவும் வேண்டிக்கொண்டார் கன்னியரிற் கன்னிகையும், கன்னியரின் இராக்கினியுமான இராணியை அண்டினால் அவளின் பரிசுத்ததனம் நம்மிலும் பரிமளிக்காதா? அது நம்முடைய இருதயங்களிலும் பற்றிப்படர்ந்து கொள்ளாதா? தான் பெற்றபிள்ளையைத் தாய் நேசிக்கிறாள் மெய். ஆயின எம்பரலோகதாய் எம்மை ஆயிரம்மடங்குஅதிகமாக நேசிக்கிறாள். பூலோகதாய்மாரின் நேசம் ஒருங்குசேர்ந்தாலும் பரமதாயின் அன்பிற்கு நிகராகுமா? தேவதாய் எம்மைநேசிக்கும் அளவை எந்தப்பக்தர்களும் அறியார்கள். அத்திருத்தாய் மனிதர்மேற்கொண்ட நேசத்தின் ஆழத்தை அளவிடமுடியாது. இதைப் பின்வரும்சம்பவம் நிச்சயிக்கிறது. அர்ச். அல்போன்ஸ் றொட்டிக்கஸ் தேவதாயின்சுரூபத்தின்முன் செபம்செய்யும்போது, அத்தாயின் நேசத்தில் ஆழ்ந்துஅமிழ்ந்தித் திரு அன்னையைப்பார்த்து: "மோட்சஇராக்கினியே, நீர்என்னை அதிகமாய்நேசிக்கிறீர். ஆயின்நான் அதிலும்பார்க்க உம்மைஅதிகமாய் நேசிக்கிறேன்" என்றார். அப்போதுதேவதாய் பட்சம் நிறைந்த கண்டிப்புள்ள புன்னகையோடு: "அல்போன்சே! என்னசொல்லுகிறாய்? நீ என்மேற்கொண்டிருக்கும் நேசத்திற்கும், நான் உன்மேற்கொண்டிருக்கும் நேசத்திற்குமுள்ள வித்தியாசத்திற்குப் பூமிக்கும், வானத்திற்குமுள்ளதூரம் வெகுசொற்பம்" என்றாள். இதிலிருந்து தேவதாய் நம்மீதுகொண்டுள்ள சிநேகத்தை அறியலாம்.

மாதாவின்மைந்தரே! வையம்போற்றும் வைகாசித்திங்களில் மாதாவின் மகிமையைப் பாவாலும் நாவாலும் பாடித் துதிப்போம். வாடாதரோசா மலர்மாலையாகிய செபமாலையைச் சூட்டுவோம். நேர்த்தியான நறுமலர்களைத் தாயின்பாதத்தில் சாத்துவோம். கவலையுற்றுக் கலங்குவோரே! கன்னியைக்கண்டு களிப்படைவீர். துன்பத்தால் துயருறுவோரே! தூயஅன்னையைத் துணிவுடன்நாடுவீர்!! தாயே நீயேதஞ்சம்; அடியோர்க்கு அருள் புரிவாய்.

இ. பேர்னாட்

தாண்டவன்வெளிச் செய்தி

## "இருதயபுரத்தில்" இருதயசபை

தாண்டவன்வெளிப்பங்கிலே—உறனி "இருதயபுர"த்தில் நவமாய்க் கட்டப்பட்டுள்ள திருஇருதயநாதர் ஆலயத்தின் நாமத்தைக்கொண்ட "யேசுவின் திரு இருதய மகிமைக்காப்பாளர் சபை"யை இப்பகுதிக் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்கள் ஆரம்பித்துவைத்தார். இதன் முதலாவதுகூட்டம் அண்மையிலே அவர்தலைமையில் நடைபெற்றது. சபைக்குத் திரு. எஸ். ஈ. நல்லையா தலைவராகவும், திரு. ஏ. இஞ்ஞாசி செபமாலை உபதலைவராகவும், திரு. ரி. செல்வராசா ஞானப்பிரகாசம் காரியதரிசியாகவும், திரு. எஸ். சிங்கராசா உபகாரியதரிசியாகவும், திரு. கே. ஜே. குரூஸ் தனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். சபையில் விவாகமான கத்தோலிக்க ஆண்களுக்கு மட்டுமே அங்கத்துவஉரிமை உண்டு. திருஇருதயப்பக்தியை அனுசரித்தல், அதனை எங்கும்பரப்புதல், இல்லங்களில் திருஇருதயஇராசாங்கஸ்தாபகம் செய்வித்தல், ஆத்மீகஅலுவல்களிலே கட்டளைக்குரவருக்கு ஆனஉதவிசெய்தல் ஆதியன சபையின்நோக்கங்களாகும்.

> செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
>
> — 11-ம் பத்திநாத பாப்பரசர்

## அர்ச். ஜோர்ஜியார் திருநாள்

தாண்டவன்வெளிப்பங்கிலே சென்ற 23-4-62 திங்கட்கிழமை அப்பங்குக் கிறிஸ்தவர்கள் அர்ச். ஜோர்ஜியார்திருநாளைக் கொண்டாடினர். இவர் இப்பங்குக்குரவர் பெயர்கொண்ட அர்ச்சியசிட்டவர். அன்றுகாலை 6 மணிக்குப் பங்குக்குரவரால்ஒருபாட்டுப்பூசை நிறைவேறியது. அதிலே இப்பங்கிலுள்ள சகலபத்திச்சபையினரும், மற்றும் கிறிஸ்தவர்களும் பங்குபற்றித் திருவிருந்தருந்தி அர்ச். ஜோர்ஜியாரிடம் தங்கள்பங்குக் குரவருக்காக விசேஷவிதமாய் மன்றாடினார்கள். பூசைமுடிவில் சகலரும அவரைச் சந்தித்துச் சுபவாழ்த்துகள் கூறித் திருக்கரஆசீர்பெற்றுச் சென்றனர்.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## தமிழ்ச் சர்வகலாசாலை

திரிகோணமலையிலே உப்புவெளி எனுமிடத்தில் தமிழ்ச் சர்வகலாசாலை இயக்கம் வாங்கியுள்ள 70 ஏக்கர் நிலத்திலே சர்வகலாசாலையின்விவசாய போதனாபீடக் கட்டடவேலைகள் ஆரம்பித்து நடத்தப்படுகின்றன. இந்த விவசாய போதனாபீடம் வருகிற ஆடி மாதத்தில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து ஏனைய போதனா பீடங்களும் ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது.

## ஆசிரியர்களின் இடமாற்றம்

கல்விமந்திரி விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலே, அடுத்து நிகழும் 1963-ம் ஆண்டு தைமாதம்வரை ஆசிரியர் எவரும் இடமாற்றம்செய்யப்பட மாட்டாரென்றும், இவ்வருடம் முடிகிறவரை பாடசாலைகளின் வேலைகள் எவ்வித தங்குதடையுமில்லாது நடைபெறுமென்றும், ஏற்கனவே செய்யப்பட்டுள்ள இடமாற்ற உத்தரவுகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமென்றும் தெரிவித்திருக்கின்றார். ஆனால், அவர் இந்த அறிக்கையை விடுத்து ஐந்து தினங்கள் செல்லாமுன்னரே பழுனுகாமத்திலுள்ள கொன்சால்வேகல்லூரி ஆசிரியர்கள்மூவர் சென்றபுதன்கிழமை இடமாற்ற உத்தரவுகள் பெற்றிருக்கின்றனர். இந்தஉத்தரவுகள் இம்மாதம் 15-ந் திகதியன்று நிறைவேற்றப்படவேண்டியன.

## கூடிய உணவு மான்யம்

வருகிற ஐப்பசிமாதம் 1-ந் திகதியன்று ஆரம்பமாகும் 1962–63 ஆண்டுப் புதிய நிதிவருடத்திலே உணவுப் பொருட்களுக்கென்று அரசாங்கம் அளிக்கவிருக்கும் உதவிமான்யத் தொகை 25 கோடிரூபாவரை இருக்குமென்று சொல்லப்படுகிறது. இவ்வளவு கூடுதலான மான்யத்தொகை சமீப வருடங்களிலே அளிக்கப்படவில்லை. கடந்த மூன்று நிதிவருடங்களிலும் உணவுப்பொருட்களுக்கென அளிக்கப்பட்ட உபமான்யங்கள் முறையே 14 கோடியே 65 இலட்சம், 19 கோடியே 30 இலட்சம், 24 கோடியே 80 இலட்சம் ரூபாவாகும்.

## ஆறுபேருக்கு மரண தண்டனை

கேகாலையைச் சேர்ந்த கலுகல்ல எனுமிடத்திலே 1960-ம் ஆண்டு ஆனி மாதம் 24-ந் திகதியன்று சதியாலோசனைசெய்து, சட்டவிரோதமாகக்கூடிக் கொள்ளையடித்து, 75 வயதுடைய ஏ. ஆர். கபுறுஹாமி என்ற பெரும் காணிபூமிக்காரரான செல்வந்தரைக் கொலைசெய்தார்களென்று குற்றஞ்சாட்டி ஜயவர்த்தன, பொடிருல ஹாமி, பியசேன, தர்மதாசா, கருண்ரத்ன, மாட்டீன் எனும் அறுவர்மீதும், மற்றிருவர்மீதும் தொடரப்பட்டிருந்த கொலைவழக்கானது கண்டிச் சுப்பிறீங் கோட்டில் விசேஷ யூரிமாரால் 26 தினங்களாக விசாரணை செய்யப்பெற்று முந்திய எதிரிகள் ஆறுபேரும் குற்றவாளிகளாகக்கண்டு சென்ற வியாழக்கிழமை மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். விசாரணையின்போது 82 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். முதலாம் எதிரியான ஜயவர்த்தன ஒரு சமாதானநீதவானும், கிராமச்சங்க அங்கத்தவரும், கொலையுண்ட கபுறுஹாமியின் மகளை விவாஞ்செய்த மருமகனுமாவர். மரண தண்டனை விதிக்கப்படுமுன் நீ யாது சொல்லவிருக்கிறாயென்று மூன்றும் எதிரியான பியசேனவை நீதியாசர் கேட்டபொழுது, "கெட்டசிநேகிதர்களுடன் கூடுவதால் விளையும் பலனைப்பற்றி ஒரு பாட்டுப் படிக்க எண்ணுகிறேன்" என்றான். அப்பொழுது அவர் நீதிஸ்தலத்திலே பாட்டுகள் படிக்கத் தாம் அனுமதிக்க முடியாதெனப் பதிலளித்தார்.

## நெடுந்தீவும் பஸ் சேவையும்

நெடுந்தீவில் பஸ் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்கவேண்டுமென்று இலங்கைப்போக்குவரத்துச்சபையைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணைஒன்றை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் சென்ற புதன்கிழமை சனப்பிரதிநிதிகள் சபையில் கொணர்ந்தார். இப்பிரேரணை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அங்கு கூடிய கெதியிலே பஸ் போக்குவரத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தொழில்–தேசீயமந்திரி தெரிவித்தார்.

## பறிக்கும் எண்ணம் இல்லை

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிப்பகுதியின் மேலதிகசெலவுகளுக்கான உபமான்யப்பிரேரணைமீது சனப்பிரதிநிதிகள்சபையிலே நடைபெற்ற விவாதத்தின்போது, கோப்பாய், மட்டக்களப்பு எம். பி. கள் இருவரும் எழுப்பிய கேள்விகளுக்குக் கல்விமந்திரி பதிலளிக்கையில், "யாழ்ப்பாணமக்களின் உரிமைகளைப் பறிக்கவேண்டுமென்ற எண்ணம் இந்தஅரசாங்கத்திற்குக் கிடையாது; காலஞ்சென்ற பிரதமர் அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிச்சயம் நிறைவேற்றும்; வசதியான சூழ்நிலை உருவானதும் யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியின் அந்தஸ்து உயர்த்தப்படும்" எனக் கூறியிருக்கின்றார்.

## புரட்சிச்சதி முடியவில்லையாம்

பிரதமர்சிறிமா கொழும்பிலே சென்ற திங்கட்கிழமை சமீதிஒன்றின் ஆண்டு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசிய போது, "அரசாங்கத்தைக் கவிழ்க்கத் திட்டமிடப்பட்ட புரட்சிச்சதி தெய்வத்தின் தலையீட்டினால்தான் முறியடிக்கப்பட்டது; அது எங்கள்பலத்தினால் முறியடிக்கப் பட்டதென்று சொல்லக்கூடாது; ஆயினும், புரட்சிச்சதி முடிந்துவிட்டதென்று மக்கள்நினைத்துவிடக்கூடாது; இன்னமும் சிலபிரிவினர் அரசாங்கத்துக்கு எதிராகச் செயலாற்றி வருகின்றனர்; நாட்டையும், சமுதாயத்தையும், மதத்தையும் விரோதிகளிடமிருந்து பாதுகாக்க மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும்" எனக் கூறலாயினர்.

## ஆசிரியர்களின் கஷ்டங்கள்

ஆசிரியத்தொழிலை எதிர்த்துப் பொதுசனங்கள் விரோதிக்குமாறு கல்விப்பகுதி பல்வேறு வழிவகைகளை அங்கீகரித்திருக்கிறது; அதன்விளைவாக ஆசிரியர்கள் முன்னில்லாத அநேக கஷ்டங்களை இன்று எதிர்நோக்கவேண்டியிருக்கிறார்கள்; இன்று ஆசிரியர்களின் இடமாற்றம், பதவி உயர்ச்சி ஆகியவற்றிலே அரசியல்வாதிகள் அத்துணை அதிகமாகத் தலையிடுகிறார்கள்; அதனால் பாராளுமன்ற அங்கத்தவர்களினதும், சிறிய அரசியல்வாதிகளினதும் கைகளிலே அவர்கள் விளையாட்டுப் பொம்மைகளைப்போல் ஆகிவிட்டார்களென்று லங்கா ஜாதிக குருசங்கமயா என்ற ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளரான திரு. டி. பீற்றர் சில்வா சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

## உதவி வித்தியாதிபதியின் இடமாற்றம்

கிழ்மாகாண உதவி வித்தியாதிபதியாகக் கடந்த ஒருவருட காலமாகக் கடமையாற்றிவந்துள்ள திரு. ஆஞ்ஜெலோ இராசகாரியர் அவர்கள் வருகிற ஆனிமாதம் 1-ந் திகதியுடன் திருகோணமலை மாவட்டத்தின் கல்வி அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பெற்றிருக்கின்றார். இவரிடமாகக் கொழும்புப்பகுதியைச்சேர்ந்த திரு. நாகொடவிதான என்பவர் கிழ்மாகாண உதவி வித்தியாதிபதியாக நியமனஞ்செய்யப்பட்டிருக்கின்றார்.

## வெளியேறிய இந்தியர்கள்

கள்ளக்குடியேற்றகாரர்என்ற முறையிலே 25,831 இந்தியரை இலங்கை அரசாங்கம் வெளியேற்றியுள்ளதென்றும், விசாமுடிந்து வெளியேற்ற அறிவித்தலின்மீது 46,114 இந்தியர்கள் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனரென்றும், 48,454 இந்தியர்கள் தாங்களாகவே இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியுள்ளனரென்றும் பிரதமர் நேரு மக்கள்சபையிலே சென்றவியாழக்கிழமை தெரிவித்திருக்கின்றார்.

## புரட்சிச்சதி வழக்கு

புரட்சிச் சதிவழக்கு விசாரணை அநேகமாக வருகிற ஆனிமாதத்தின் முதல்வாரத்திலே நீதிஸ்தலத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதன்மேல் வழக்கு விசாரணையை ஆரம்பிக்கும் திகதி நிர்ணயிக்கப்படும். புரட்சிச்சதி சம்பந்தமாகக் காவலில் வைக்கப்பெற்ற ஒவ்வொருவரும் தனது வழக்கறிஞரைச் சந்திக்க 45 நிமிஷங்கள் அனுமதிக்கப்படுவர். வழக்கை விசாரணைசெய்யும் நீதியாசர்களை நீதிமந்திரி விரைவிலே நியமனஞ்செய்யவிருக்கின்றார். வழக்கை அற்றோணி ஜெனறலே அரசாங்கதரப்பில் முன்னின்று நடத்துவார். அவாது உடல்நிலை இடமளியாவிடில் பிரபல பிரித்தானிய வழக்கறிஞரான திரு. டி. லோசனே அரசாங்கம் தருவிக்குமென நம்பப்படுகிறது.

## போட்டியிடும் ஏழுகட்சிகள்

எதிர்வரும் மூதூர், அநுராதபுரம், வெலிமடைத் தொகுதிகளின் உபதேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஏழு அரசியற்கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென்று தேர்தல்கமிஷனர் தெரிவித்திருக்கின்றார். இந்த ஏழு அரசியற்கட்சிகளினதும் அபேட்சகர்கள் கட்டுப்பணத்தொகையில் அரைவாசி மட்டுமே செலுத்தவேண்டியவர்கள். சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசீயக்கட்சி, தமிழரசுக்கட்சி, இலங்கை இந்திய காங்கிரஸ், ஜாதிக விமுக்தி பெரமுனை, மகாஜன எக்சத் பெரமுனை, ஐக்கிய இலங்கைக்கட்சி என்பனவே அந்த ஏழு கட்சிகளுமாகும். கட்சிகளின் சின்னங்கள் நியமனதினமாகிய இம்மாதம் 22-ந் திகதியன்று நிர்ணயிக்கப்படும்.

## பஸ் விபத்துகள்

இலங்கைப் போக்குவரத்துச் சபையைச்சேர்ந்த பஸ்கள் சென்றவருடத்தில் 4 515 விபத்துகளில் ஈடுபட்டிருப்பதாய்க் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றிலே 48 விபத்துகள் படுமோசமானவையென்றும், 670 விபத்துகள் பாரதூரமானவையென்றும் சொல்லப்படுகிறது. முந்திய வருடங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது சென்றவருடத்தில்தான் கூடுதலான விபத்துகள் நிகழ்ந்திருக்கின்றன. 1958-ம்ஆண்டு நிகழ்ந்த விபத்துகள் 2,915. 1959-ம் ஆண்டு 3,399 விபத்துகள். 1960-ம் ஆண்டு 3,934 விபத்துகள்.

## பாடசாலைகளும் பழைய கடனும்

அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகள் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுப்பதற்கென்று கல்விமந்திரி சென்ற வியாழனன்று சனப்பிரதிநிதிகள்சபையிலே 11 இலட்சத்து 93 ஆயிரத்து 220 ரூபா உபமான்யம் கோரிக் கொண்டுவந்த பிரேரணை அனுமதிக்கப்படலாயிற்று. அப் பாடசாலைகளின் சொத்துகளை அரசாங்கம் பொறுப்பேற்றதால் அவைகள் கொடுக்கவேண்டியகடன்களையும் அரசாங்கம் கொடுக்கவேண்டியிருப்பதாகச் சபையிலே அவர் தெரிவித்தார்.

## தேசீயசேவையும் பிள்ளைகளும்

அகிலஇலங்கைக்குமான தேசீய சேவைத் திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவரும் மசோதா ஒன்றை அரசாங்கம் இம்மாதத்திலே சனப்பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பிக்க ஆலோசிப்பதாய்த் தெரியவருகிறது. பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் தாங்களாகவே மனங்கொண்டு தேசீய சேவையில் ஈடுபடுவதற்கும், சிரேஷ்ட பாடசாலை மாணவர்களுக்குத் தேசீய சேவையையும் பாடசாலை வேலைகளில் ஒருபகுதியாக்குவதற்கும் இந்தப்புதிய மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பாடசாலைப் படிப்பை முடித்துச் சர்வகலாசாலைக்கோ அல்லது உத்தியோகத்திற்கோ மனுச்செய்யும் மாணவர்கள் தேசீய சேவை செய்ததாக நற்சாட்சிப் பத்திரங்களை இனிமேல் கொண்டிருக்க வேண்டும்.

## தகப்பனும் இருபுதல்வரும்

மஹாரஹமையிலே ஜயந்திமவதா எனும் கிராமத்தைச்சேர்ந்த 65 வயதுடைய பறன் பெறேறாவும், அவனுடைய இருபுதல்வர்களான 32 வயதுடைய சிமியோன் பெறேறாவும், 25வயதுடைய லெயோன் பெறேறாவும் 1960-ம் ஆண்டு மார்கழி 18-ந் திகதியன்று தங்கள் அயலானான பீற்றர் டயஸ் என்பவனைக் கொலை செய்தார்களென்று குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட கொலைவழக்கானது கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணை செய்யப்பெற்று மூவரும் கொலைக் குற்றவாளிகளாகிச் சென்ற வியாழக்கிழமை மரணதண்டனை விதிக்கப்படலாயினர். பறன் பெறேறாவின் மற்றோர் புதல்வனான 22 வயதுடைய பீரிஸ் பெறேறாவும் இந்தக்கொலைசம்பந்தமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தும் விசாரணை முடிவில் சுற்றவாளியாகி விடுதலை செய்யப்பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### வைகாசி மாதம் — 1962

| | | | |
|---|---|---|---|
| 13 | ஞா. | **பாஸ்காவின் 3-ம் ஞாயிறு** (வி. ம.) | வெ. |
| 14 | தி. ம | காலதினம் (ஞாயிறு பூசை) அர்ச். பொனிப்பாஸ் | வெ. |
| 15 | செ. | அர்ச். டெலாசால் அருளப்பர் | வெ. |
| 16 | பு. | அர்ச். உபால்தப்பர் | வெ. |
| 17 | வி. | அர்ச். பாஸ்கால் பேயிலன் | வெ. |
| 18 | வெ. | அர்ச். வெனன்சியார் | சி. |
| 19 | ச. | அர்ச். செலஸ்தீர் அருளப்பர் (அர்ச். புடென்சியானு ஞா ) | வெ |

சத்திய வேத
பாதுகாவலன்

1962-ம் ஆண்டு
வைகாசிமாதம் 20-ந் திகதி

## "தாயாக நீர்இரும்"

ஞானநெறியில் நடப்பவர்களுக்கு மோட்சத்தில் நினைவு. நல்லறிவுள்ளோர்க்கு நாடோறுந் தருமத்தில் நினைவு. அஃதேபோல் மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவர்மனத்திலும் ஒரு தனிப்பெரும்நினைவு தவறாதிருத்தல்வேண்டும். அதுவே தேவபக்தி. மானிடவாழ்க்கையைத் தேனென மிளிரச்செய்வது அது. உண்மை நெறியை ஊட்டுவது அது. மனத்தை மலரச்செய்வது அது. மன்பதைகளின் துன்பத்தை இன்பமாக மாற்றவல்லது அது. சுருங்கச்சொல்லின் பக்தியற்ற வாழ்க்கை சக்தியற்றது, சித்தியற்றது. இந்தமகத்தான இறைவன் பக்தியை எய்துவதற்கு இணையற்ற வழிகாட்டியாய் இருப்பது மாதாவின் மாண்புறுபக்தி. மாதாவில் நினைவில்லா மக்களும் உளரோ? நரகதிக்கில் நம்மைநடத்தாமல் பரகதிக்கு ஆளாக்கவல்ல பரமனின்தாய் நமக்கும் தாய் அன்றோ?

பிறந்தபொன்னாடும், சிறந்த எங்நாடும் பெற்றதாய்க்கு ஈடாகா. மண்கொண்டபூமியில் கண்கண்ட தெய்வம் அவரன்றோ? பத்துமாதஞ் சுமந்து பரிவுடன் பெற்றெடுத்தநற்றாயை—உச்சிமோந்து—பிச்சிசூடி—உள்ளங்குளிரவைத்த நற்றாயை—தாலாட்டித் தலைமேல் வைத்த நற்றாயை—அறுசுவையுணவும் குறைவறத்தந்த நற்றாயை—தன்பிள்ளை நோயகலத் தானேமருந்துண்ணும் தவப்பேறான நற்றாயை எவ்வளவு அருமைபெருமையாய்ப்போற்றுகின்றோம். புகழுகின்றோம். ஏனெனில் தாய்மையில் தன்னலங்கருதாமை, தியாகம், பொறுமைமுதலிய நற்பண்புகள் இயற்கையிலே சாலஅமைந்துள்ளன. இக்குணங்களினாலேயே உலகம் இயங்கி நடைபெறுகின்றது. கணக்கற்ற கல்விநூல்களினாலும், கற்றறிந்த ஞானிகளாலும் கணிக்கப்படுவது சீரியகுணநலம் நிரம்பிய தாய்மையே. தாய்மையின் தனிப்பெருந் தன்மையை உன்னியே ஆண்டவனை "அம்மையே" என்றும் அழைக்கின்றனர். "தாதாய்! நீயே உலகுக்கெல்லாந் தாய்" என்றும், பிறந்தநாட்டைத் தாய்நாடென்றும் பேசும்மொழியைத் தாய்மொழிஎன்றும், பேதுருஎன்னும் கல்லின்மேல் கட்டிய கத்தோலிக்கதிருச்சபையை "பரிசுத்தமாதாவாகிய திருச்சபை" என்றும் அழைக்கின்றனர் தாய்மையிலே இத்துணைச் சிறப்பென்றால், வல்லபிதாவின் நல்லகுமாரத்தியும், தேவசுதனின் திவ்வியதாயும், இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனின் இணையிலாப் பிரியமுள்ளவளுமாயிருந்து திரித்துவத்தின் அருளெலாம் ஒருசேரப் பெற்றுத்தரும் பாக்கியம் பொருந்திய தேவதாயாரின் திவ்வியமகிமையைத் தெருட்டவல்லவர் யார்?

மாதாவின்பக்தியே பேரின்பத்துக்கு ஏற்றிச்செல்லும்பெரியஏணி. மக்கள்மனத்தை யிழுக்கும் மாண்புறு காந்தம். அள்ள அள்ளச் சுரக்கும் அருமையான ஊற்று மூவுலகும் போற்றும் முழுமுதற் கடவுள் மாதாவின்மூலம் மண்ணிற்பிறந்தார். மாதாவை நமக்குத்தாயாகத் தந்தே மன்னுயிர் துறந்தார். எனவே மாதாவின்மூலமே நாமும் இரட்சணியத்தை அடையவேண்டுமென்பது அவரது திருச்சித்தம் என்பதும் தெளிவாகின்றது. பொதுவாக உலகில் எல்லாத்தாய்மாரும் என்றும் நாடிச்செல்லும் ஏகதாய் தேவதாயன்றோ!

தாயே! தயாபரியே! எமக்குத் "தாயாக நீர்இரும்" என்றும், "தாயாக உம்மைக்காட்டும்" என்றும்பாடித் துதிக்கின்றோம். தாயார் அன்றுள்ள தாய்போலவே என்றும் இருக்கிறாள். இருப்பாள். அதற்குப் பதில் நாமோ சேயாக இருப்பதுமில்லை. சேயாக நம்மைக் காட்டுவதுமில்லை. 'பொல்லாத பிள்ளையென்றாலும் தாய் தள்ளாள். புகலிடந்தருவாள்' என்றநம்பிக்கையினால் செல்லாநெறியெல்லாஞ் சென்றுகெடுகின்றோம்; மழைமுகங்காணாத பயிர்போல் மடிந்து படுகின்றோம். ஈற்றில் ஆவதென்ன? கரும்பிருக்க இரும்பை மெல்வதும், வழியிருக்கக் குழியில் விழுவதுந்தான். இது தாயாரின் தண்ணளிக்குறைவா? ஒருபோதும் இல்லை.

அங்ஙனமாக, தாய்க்கு உவந்த செபத்தை ஓதினோமா? தபத்தைப் பண்ணினோமா? தாயே! தஞ்சமென்றோடிவந்தவேளை அஞ்சல்என்றருள் புரிந்த அருமையை எண்ணினோமா? எமது நெஞ்சத்தாமரையை நிர்மல பாதத்தில் சூட்டினோமா? மாதாவின் மாசமாகிய இந்தவைகாசி மாதத்திலாவது அவர் அருளைப்பெற ஒருசிறு கணமாவது சிந்திக்கிறோமா? தாயே! தாயாக நீர்இருந்து தாசரைப் பிழை பொறுத்துக்காரும்.

---

## கழிவுப்பொருள் மன்னர்

குப்பைத்தொட்டி இராசாஎன அழைக்கப்படுகின்ற பிரெக்கொன்சியரின் பங்குக்குருவர் வண ஹியு ஹீலி சுவாமிகள் பூசைப்பலி ஒப்புக்கொடுத்தபின் ஆலயமொன்று நிறுவுவதற்கெனப் பழைய கழிவுப்பொருள்கள் தேடித்திரிவார். 50 பேரைக்கொண்ட கோயில்ஒன்றுக்குப் பங்குக்குருவாக மூன்று ஆண்டுகளுக்குமுன் நியமனம் பெற்றபொழுது அவர் சாதாரணவழிகளால் கோயில்கட்டடநிதிக்குப் பணஞ் சேகரிக்கமுடியாதென உணர்ந்தார். ஞாயிற்றுக்கிழமை பூசைமுடிந்ததும் அவர் தமதுமோட்டார்வானிற்சென்று பலபட்டணங்களிலும் பழையஉடைகள் சேகரிக்கின்றார். அவைகளைக் கழுவிமடித்துக் கோடைகால விற்பனைக்கென வைத்திருப்பார். மலிவுவிற்பனைத்தினத்திலே வெகுதூரத்திலிருந்து மக்கள் வந்துகூடுகிறார்கள். நாள்ஒன்றுக்கு 40பவுண்வரையில் கிடைக்கும். எந்தச்சிறுகொடையும் பேருதவியாகக் கருதப்படும்என்கிறார் வண. ஹீலிசுவாமிகள்.

## 2-ம் வத்திக்கான் திருச்சங்கத்தின் சித்திக்காகச் செபம்

**திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே! உமது பிரசன்னத்தினாலும், உறுதியான வழிநடத்துதலினாலும் திருச்சபையோடு என்றுமிருக்கும்படி யேசுவின் நாமத்தினால் பரமபிதாவினால் அனுப்பப்பட்டவரே! திருச்சபையின் பொதுச்சங்கத்தின்மேல் உமது நிறைவான வரங்களைப் பொழிந்தருளும்படி தேவரீரை இரந்து மன்றாடுகிறோம்.**

**எமது மதுரமான ஆறுதலும், ஆசிரியருமானவரே! பரிசுத்த பாப்பரசரின் அழைப்புக்கிணங்கி உரோமாபுரியில் திருச்சங்கங்கூட மகிழ்ச்சியுடன் வந்துசேரும் ஆயர்களின் மனதுகளை உமது தெய்வீக பிரகாசத்தால் நிரப்பியருளும்.**

**இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலகமக்களிடையே அதிகமதிகமாய்ப் பரவவும், கத்தோலிக்கவேதமும் அதைப்பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்க வழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.**

**எமது ஆத்துமத்தின் மதுரமான வழிகாட்டியே! நாங்கள் மனத்தாழ்ச்சியும், அமைச்சலும் உள்ளவர்களாயிருக்கவும் திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றிநிறைந்த மனதுடன் ஏற்று, அனுசரிக்க ஆசைப்படவும் எங்கள் மனதைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தியருளும்.**

**கிறிஸ்துநாதருடைய பெயரில் பெருமை பாராட்டிக்கொண்டு அவரால் நிறுவப்பட்ட ஏகமந்தையைவிட்டு இன்னும் பிரிந்து நிற்பவர்கள் கடைசியாய் ஒரே மேய்ப்பனின்கீழ் ஒற்றுமையைக் கண்டடையச் செய்தருளும்படி மன்றாடுகிறோம்.**

**முன்னொருநாள் பெந்தெக்கோஸ்துதினத்தில் தேவரீர் புரிந்த அற்புதங்களை எங்கள் காலத்திலும் இன்னொருமுறை செய்தருளும்படி கெஞ்சி மன்றாடுகிறோம். உமது திருச்சபை யேசுநாதருடைய தாயாரான பரிசுத்த கன்னிமரியம்மாளுடன் தளராத வேண்டுதலில் ஒன்றித்திருப்பதாலும், அர்ச். இராயப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாலும், எமது திவ்விய இரட்சகரின் இராச்சியம்—உண்மையினும், நீதியினும் அன்பினும் சமாதானத்தினும் இராச்சியம்—உலகெங்கும் பரவச்செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.**

**குறிப்பு:** இச்செபத்தைப் பத்தியுடன் செபிப்போர் அடையக்கூடிய பலன்களாவன:

1. பத்துவருட அபூரணபலன். (ஒவ்வொரு முறையும்)
2. நாள்தோறும் ஒருமாதமளவாகச் செபித்தால் (வழமையான நிபந்தனைகளுக்கிணங்க) ஒரு பரிபூரணபலன்.

## வறுமையும் பிணியும் போக்கப்படுகின்றன

பிறேசில்நாட்டு மேற்றிராணிமார் அரசாங்க நிபுணருடனும், தொழிற்சங்க அதிபருடனும் விவாதித்ததன் பயனாக அந்நாட்டுக்குப் பொருளாதார, சமூகசேவைகள் அதிதுரிதமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சுகாதாரவசதிகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன. விவசாயப்பயிற்சி பெற்றுவருகிறவர்கள் அப்பயிற்சிமுடிவில் விவசாய கூட்டுப்பண்ணைகள் நடாத்தவும், வானொலிப்பயிற்சிகள் அளிக்கவும் கூடியவராவர். உபகரணங்கள், விதைகளுக்கெனப் பிறேசில்வங்கி உதவியளிக்கின்றது. நீர்ப்பாசனவசதிகள், வைத்திய, கல்விவசதிகளும் கமக்காரருக்கு உதவிசெய்யப்படுகின்றன. வடக்கே பொதுவுடமைஏவலில் மக்கள் கொதித்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுவுடமைப் பிரசாரங்களுக்குத் தக்கசூடுபோட்டு வருகிறார்கள்.

## வேதப்பரப்புதல் சேவை

திரு. யேம்ஸ் கிறேன் என்பவரும், அவர்மனைவியாரும், பத்துப்பிள்ளைகளுமாகிய பன்னிருவர் ஐக்கியஅமெரிக்க தேசத்திலே தங்கள்நாடாகிய கெந்துக்கியிலிருந்து வடதுருவத்தையடுத்துள்ள அலஸ்காநாட்டிற்கு வேதப்பரப்புதல் சேவைசெய்யச் செல்லவிருக்கின்றனர். அங்கே இருவருடகாலம் இவர்கள்சம்பளம்பெறாது எஸ்கிமோவர் மத்தியில் திருத்தொண்டு ஆற்றுவார்களெனத் தெரியவருகிறது.

## சிறைவாசம்செய்யும் குருமாரும் மேற்றிராணிமாரும்

செக்கோசிலவக்கிய அரசாங்கம் 1960-ம் ஆண்டின் வைகாசி மாதத்திலே எல்லாச்சிறைக்கைதிகளையும் விடுதலை செய்வதாகப் பிரசித்தஞ் செய்திருந்தது. ஆனால், இன்று 500 கத்தோலிக்க குருமாரும், 20 மேற்றிராணிமாரும் அங்கு சிறைவாசம் செய்துவருகிறார்கள். இவர்களில் அநேகர் 1949—50-ம் ஆண்டிலேபோலிக்குற்றச்சாட்டுகளின்பேரிலே சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டவர்கள். இவர்களுடைய இனசனர்மாத்திரம் இவர்களைத் தரிசிக்க அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

## 3 இராணிகளும் 5 பாப்புமாரும்

திருச்சடங்காசார முறைகளின் திருச்சங்கத்தால் அர்ச்சியசிஷ்டபட்டம்சூட்டப்படுமாறு விசாரணைநடத்தப்படுகிறவர்களாய் 2,290பேர் இருக்கின்றார்கள். இவர்களில் 3 இராணிகளும், 5 பாப்புமாரும், 13 கருதினால்மாரும் அடங்குவார்கள். கருதினால்மார்களில்கருதினால்மெறிடிவால், கருதினால்வொன்கலேன் என்போர் இருவராவர். பாப்புமாரில் 5-வது இன்னோசென்ற், 11-வது இன்னோசென்ற், 10-வது கிறகோரியார், 13-ம் ஆசீர்வாதப்பர், 9-ம் பத்திநாதர் ஆகியோர் அடங்கியுள்ளார்கள்.

---

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### வைகாசி மாதம்

**பொதுக்கருத்து:** கத்தோலிக்கருக்கும், பிரிந்திருக்கும் கிறீஸ்தவர்களுக்குமிடையே அதிகமான மதிப்பும், இன்னும் நுணுக்கமான விசாரணைகளும் உண்மை ஒற்றுமைக்காகிய வழியை ஆயத்தம்பண்ணத் தக்கதாய் வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** திவ்விய நற்கருணைமேல் நமக்கிருக்கும் ஆழமான பக்தியானது மிஷன் நாடுகளிலே குருத்துவ, சந்நியாச அழைத்தல்களை அதிகரிக்கச்செய்யுமாறு மன்றாடிக்கொள்வது.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுக்கிறீஸ்துநாதரின் தெய்வீகம்

## ஒரு மீட்பரை எதிர்பார்த்திருந்த உலகம்

யாழ்ப்பாணத்திலே சமீபத்தில் நடந்த பத்திரிசியஇயக்கக் கூட்டம் ஒன்றில் புத்தர், மகம்மது, கிறீஸ்து என்னும்மூவரும் சமயங்களை உலகில் ஸ்தாபித்தார்கள் என்று எடுத்துக் கூறப்பட்டது. அவ்வேளை இவர்கள் மூவரும் ஒரேதன்மை யானவர்களா? இவர்கள்நிறுவிய சமயங்கள் ஒரே இலக்கை உடையனவா? இம்மார்க் கங்கள் எல்லாம் சன்மார்க்கங்களா? என்ற பலபிரச்சினைகள் என்மனசில் எழுந்தன. ஆனால், கிறீஸ்து நாதர் தேவனாக இருப்பதால் அவர்ஸ்தாபித்த சமயமும் தெய்வத்தன்மையுடைய தாய் இருக்குமென்பது பெறப்படும். ஆகவே, இக்கட்டுரையை நல்லூர், சுவாமி, ஞானப்பிரகாசர் வெளியிட்ட "யேசுநாதசுவாமியின் தேவத்துவ விளக்கம்" என்னும் நூலைத்தழுவி எழுதியிருக்கிறேன்.

யேசுக்கிறீஸ்துநாதர் ஒருசாதாரண மனிதனைப்போல் இப்பூவுலகில் பிறந்து, வளர்ந்து மரித்தார். ஆனால்,அவரோ மெய்யான தேவனென்று நாமெல் லாம் விசுவசிப்பதற்குச் சிறந்தசான் றுகள் பலஉள. அவருடையபிறப்பை நாலாயிரம்ஆண்டுகளாக மக்கள் எதிர் பார்த்திருந்தார்கள். மீட்பர்ஒருவர் வருவாரென தேவவாக்குத்தத்தம் மனுக்குலத்தின் தலையாகிய ஆதாம் காலத்தில் செய்யப்படுவதாகி அக்காலந் தொட்டுப் பழையஏற்பாட்டில் கூறப் பட்டுள்ள அதிபிதாக்களாகிய ஆபிர காம், ஈசாக்கு, யாக்கோபு ஆதியோ ரால் பரம்பரைபரம்பரையாய்க் கைக் கொள்ளப்பட்டே வந்ததுஎன்பது வேதசரித்திர சம்மதம். ஆனால்,இதே கொள்கையை ரோம, கிரேக்க, கீழ் தேச பாரம்பரியம், தத்துவசாஸ்திரம், புராணக்கதை ஆகியனயாவும் ஒன்று கூடிஇசைந்து உலகத்தின் சகலசாதி யாரும் ஒருமீட்பரை எதிர்பார்த்தே யிருந்தனர்.

### பிறப்பு:

இதோ! ஒருநாள் கார்மேல், தபோர்என்னும் மலைச்சிகரங்களுக் கிடையில் ஒருமனிதன் அவதாரஞ் செய்தார். உலக அளவுகோல்களால் அவரைக்கணிக்குமிடத்து அவரை ஒரு வறியமனிதனென்றே கூறவேண்டும். ஒருமாட்டுக்கொட்டிலில் பிறந்து, முன்னிட்டியில் கிடத்தப்படுகிறார். ஓர் ஏழைத் தாயானவளே அவர்முதன் முதலாகஅழுத கண்ணீர்த்துளிகளைத் துடைக்கிறாள். தாரித்திரகோலமான சிறுகுடிசையொன்றே பாலியநாட் களில் அவருக்குப் புகலிடமா யிருந் தது. ஆனால்,அவரின்பிறப்பை ஒரு புதியநட்சத்திரம் உலகுக்கு வெளிப் படுத்தியது. பரலோகத்திலிருந்த சம்மனசுகள் இப்பூவுலகுக்கு இறங்கி வந்து: "பரலோகத்தில் தேவனுக்குத் தோத்திரமும், பூலோகத்தில் நல்மன சுள்ளோர்க்குச் சமாதானமும் உண் டாவதாக"என்று பாடிப்போற்றினர். மூவிராசாக்கள்என்று நாம்குறிக்கும் முடியுடைவேந்தர் இத்தாரித்திர குழந்தையைத்தேடிப் பலமைல்தூரம் பிரயாணஞ்செய்து தாங்கள்கொண்டு வந்த பொன்,தூபம்,வெள்ளைப்போளம் என்ற மூவிதகாணிக்கைகளை அவர் பாதங்களில்வைத்து வணங்கினர். என்ன ஆச்சரியம்! இக்குழந்தை ஒரு சாதாரண மனுக்குழந்தை அல்லஎன் பதற்கு இவைகள் போதியசான்றுகள் அல்லவா?

### வாழ்க்கையும் திருவாக்குகளும்:

அட்ட தரித்திரமாய்ப் பிறந்தகுழந்தை—கைத்தொழில்செய்து சீவித்த காலத்திலே கண்ணீரோடு நெற்றி வியர்வைகலந்த போசனத்தைப் புசித்தசிறுவன்— முப்பதுவருடகால மாகத் தமதுதாயாருக்கும், கைத்தா தையாகிய சூசையப்பருக்கும் நசரேத் தூரில் கீழ்ப்படிந்து நடந்தவாலிபன் சடுதியாகத் தமதுவாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் காண்பிக்கிறார். இச்சா தாரணமனிதன் பூலோகவாசிகள் உளந்தடுமாறிநிற்க, அவர்கள்மத்தியில் உலாவி, உலகத்தின்ஒளி தாமே என்றும், தாமே வழியும், சத்தியமும், சீவியமும்என்றும், ஆதியும்,அந்தமும் தாமேஎன்றும் ஆச்சரியத்துக்குரிய போதகங்களைத் தொடங்கினார். இவ் வார்த்தைகள் உண்மையென்று ருசுப் படுத்துவதற்காக நோயாளரைச் சடுதி யிலே குணப்படுத்தினார். குருடர், செவிடர், சப்பாணிகளுக்குக் கண், காது, கால்கள் வழங்கினார். கடலலைகள் மேல் நடந்தார். சண்டமாருதங்களை அதட்டி அமரச்செய்தார். மரித்தோ ரை மரணத்தின்வாயினின்று பறித் தெடுத்தார். சவக்குழியில் அடக்கப் பட்டவரை மீண்டும் சீவியரின் உலகுக்குக் கொடுத்தார். அப்போது இவ்வதிகாரங்களும், வாக்குகளும் தேவனுக்கேயுரிய இலட்சணங்கள் என்று சிலர் அவரதுவார்த்தைகளைக் கேட்டுப் பிரமித்துபோய் நிற்கின்றனர். சிலர் அவரை எதிர்த்துநிற்கின்றனர். பலர் அவரைநேசிக்கின்றனர். வேறு பலர் அவரைப்புறக்கணித்து இகழ் கின்றனர். ஆனால்,அவருடைய தேவத் துவத்தை உணர்ந்தவர்கள்போல் எல்லாரும் பிரேமைஅடைந்து "இவர் மற்றோரைப்போலப் பேசுகிறவரல்லர். அதிகாரம் உள்ளவர்போலப் பேசு கிறார்"என்று அறிக்கையிடுகிறார்கள். இவருடைய போதகங்களைக் கேட்டு, அவர்செய்த புதுமைகளைக்கண்ட அநேகர் அவரைப்பற்றிப் பூரணமாய் அறியவிரும்பியபோது, "அனுப்பப் படவிருந்த கிறீஸ்து(மேசியா) நானே, தேவசுதன் நானே என்று தெள்ளத் தெளிவாகத் தமதுதெய்வீகத்தை எடுத்துவிளக்குகிறார்.

இத்தெளிவுறுத்தலை உண்மையாக மக்கள் உணர்ந்தார்களோவென்று அறியும்பொருட்டுத் தமதுசீஷர்களைப் பார்த்து: "நான் யாரென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று வினவுகின் றார். சீஷர்களோ அர்ச். பேதுரு வானவர்மூலமாய் அவரைநோக்கி, "சீவியராகியதேவனின் சுதனாகிய கிறீஸ்துநீரே"என்று விசுவாசப்பிர மாணம் செய்துகொள்ளுகிறார்கள்.

இவ்வாறு அவருடைய பகிரங்க வாழ்க்கையின் பலதுறைகளை ஆராயும் பொழுது, அவர் இயற்கையின்மேல் செலுத்திய அதிகாரத்திலே — அவர் புத்திசம்பந்தமாய்ச் செலுத்திய அதிகாரத்திலே—அவர் ஒழுக்கசம்பந் தமாய்ச் செலுத்திய அதிகாரத்திலே —அவர் சாகியசம்பந்தமாய்ச் செலுத் திய அதிகாரத்திலே — அவருடைய மரணத்திலே—அவருடைய உத்தா னத்திலே தேவத்துவம் விளங்குகின் றது என்பது தெற்றெனப் புலப்படு கிறது.

### திருச்சபையும் தேவதிரவிய அனுமானங்களும்:

யேசுக்கிறீஸ்துநாதர் தாம் தேவ னென்று அத்தாட்சிப் படுத்துவதற்கு "நான் சத்தியத்திற்குச் சாட்சிசொல் லும்படியாகப் பிறந்தேன். அதற்காக உலகத்திற்கு வந்தேன்"என்று குறிப் பிடுகிறார். ஏனெனில், அவர் ஆத்து மங்களைமீட்க மானிடச்சட்டை சாத்திவந்தமீட்பர். ஆகவே,அவர் ஸ்தாபித்த சபையானது ஆத்துமசம் பந்தமான ஓர்சாகியமாகிய திருச் சபையாகும். உலகிலுள்ள விவித சாதிகளெல்லாம் [illegible] ஒன்று கூடி அமரச்[illegible] வல்லமை போதாதல்லவா? அதற்குத் தேவவல்லமையே வேண்டும். யேசு நாதர்ஒருவரே இடவரம்பையும், கால வரம்பையும், சனவரம்பையும், சாதி வரம்பையும், நிறவரம்பையும் மேற் கொண்டு தமதுதிருச்சபை உலகம் அடங்கலும் பரம்பவேண்டுமென்ற பரந்தநோக்கத்தோடு அதைஸ்தாபித் தார்: "நீங்கள்போய் எல்லாச்சாதி யாருக்கும் போதியுங்கள்," "உங்களுக் குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான்; உங்களைப் புறக் கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக் கிறான், என்று தமதுதேவவல்லமை யோடு தமதுசீஷர்களை உலகின் சகல பாகங்களுக்கும் அனுப்பிவைக்கிறார். அவர்ஸ்தாபித்த சமயமோ பூமியின் அகட்டினுள் ஆழவேரூன்றி வானளாவி எழுந்து பரந்துநிற்கும ஒருமகாவிருட் சத்தைப்போல் மனுக்குலத்தின் செல் காலம்முழுமையையும் அடக்கியதாய், அதன் எதிர்காலத்துக்கும் அஞ்சாத தாய் நிற்கின்றது.

அச்சபையின் நோக்கம்தான் என்ன? ஒருருசாகியத்தின் மகத்து வமா? அல்லது ஓர்அரசியல் கட்சி யின் வெற்றியா? இல்லை, இல்லை. பாழடைந்தமக்களைப் பாதாளத்தில் பாடுபடவிடாது நித்தியபேரின்ப பாக் கியத்துக்கு உரிமையுடையவர்களாக்கு வதே அதன்நோக்கம். சாத்தானுக்கு அடிமைகளாகப் பிறந்துவாழும் மனித ரைச் சர்வேசுரனுடைய சுவிகாரப் பிள்ளைகளாக்கி நித்திய மோட்சானந் தத்தைப் பெறச்செய்வதே அதன் இலக்கு. ஞானஸ்நானம்என்னும் தேவதிரவிய அனுமானம் எமது சென்மபாவத்தைப்போக்கி எம்மைச் சர்வேசுரனுடைய பிள்ளைகளாக்கு கிறது. ஞானச்சீவியத்திலே பிறந்து வளர்பவருக்குப் பெலன் அளிக்கும் நோக்கத்தோடுஅவர் உறுதிப்பூசுதல் என்ற தேவதிரவிய அனுமானத்தை ஸ்தாபித்தார். ஆத்துமத்தைப் போஷிக்கத் தம்மையே நமக்குஉண வாகத் தருவதற்காகத் திவ்வியநற் கருணையை உண்டாக்கினார். நாம் செய்யும் பாவங்களுக்கு மன்னிப்பு அருள்வதற்காகப் பச்சாத்தாபத்தை ஏற்படுத்தினார். கடவுளின்தொண் டாகிய சிருஷ்டிப்பில் ஆண்களும், பெண்களும் பாவமின்றிப் பங்குபற்ற மெய்விவாகம்என்னும் தேவதிரவிய அனுமானத்தை ஸ்தாபித்தார். ஆனால், கற்பைஅநுசரித்துக் கடவு ளின் சேவைக்காகத் தம்மை அர்ப் பணம்செய்து திவ்வியபூசைப்பலியை ஒப்புக்கொடுக்கவும், தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றவும் குருத்துவத்தை உலகத்திற்குக் கொடுத்தார். ஈற்றில், நாம் மரணத் தறுவாயில் இருக்கும்போது எம்மை மறுவுலக சம்பாவனைக்கு ஆயத்தப் படுத்தி ஆறுதலாக — நமதுஆத்துமங் களை கடவுளிடம் ஒப்படைக்க உதவி யாக அவஸ்தைப்பூசுதலை ஏற்படுத் தினார். இவையாவும் யேசுக்கிறீஸ்து நாதர் உண்மையான தேவனென்று நிரூபிக்கின்றன அல்லவா?

---

● அதிகம்கூடிய சக்திவாய்ந்த "மரணக்கதிர்" ஆராய்ச்சிஒன்றிலே அமெரிக்கஇராணுவம் தற்போது ஈடுபட்டிருக்கிறது எதிலுபட்டவுடன் அதற்கு மரணம் விளைவிக்கக்கூடிய இந்தப்புதுமாதிரியான ஒளிக்கதிர் ஏவாயுதத்தைத் தடுக்கும்ஆயுதமாகப் பாவிக்க ஏதுவிருப்பதாக நம்பப்படு கிறது. எப்படிப்பட்ட உலோகத்தை யும் [illegible]பொழுதில் இந்தக்கதிர் [illegible]கிறதாம்.

---

## ஏழைகளின் சம்மனசாகிய......

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

வின் சபையைச்சேர்ந்த ஒருவர் மாடப்புறுக்களைக்கொண்டதங்கக் கூண்டுஒன்றைக் கொண்டுசென் றார். பெருவியநாட்டுக் கத்தோ லிக்கர்ஒருவர் திராட்சரசத்தைக் கொண்ட ஒருதங்கப்பீப்பாவை யும், மற்றொருவர் தண்ணீரைக் கொண்ட ஒருவெள்ளிப்பீப்பா வையும் கொண்டுசென்றார். மற்றும்இருவர் பெரியஅப்பங் களைக்கொண்ட தங்கவெள்ளித் தாம்பாளங்களைக் கொண்டு சென்றனர். இவைகள் பாப்பர சருக்கு வழங்கப்படும் பாரம்பரி யமான காணிக்கைகளாகும்.

திருவைபவங்களுக்குச் சமுக மளித்திருந்த யாத்திரிகர்களில் லீமாநகரின் அதிமேற்றிராணியா ரான கருதினல்றிக்கெற்ஸ்ஆண் டகையின் தலைமையிலேசென்றி ருந்த பெருவியர்களும் இருந்தார் கள். இத்தாலியர்களிடையே வடஇத்தாலியிலிருந்துவந்த இரு நூறுநாவிதர்கள் இருந்தார்கள். அர்ச். மாட்டீன் ஒருகாலத்திலே ஓர்நாவிதராகக் கடமைபார்த்தி ருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. ஐக்கியஅமெரிக்க தேசத்திலிருந்துபோன நீகிரோ யாத்திரிகர்களில் புரொட்டஸ் தாந்தகுழுஒன்றும் அடங்கியிருந் தது. "ஏழைகளின்சம்மனசாகிய மாட்டீனுக்குத் ஸ்தோத்திரம்" என்ற நவீனகீதஓசையானது அன்றுதினம் அயர்லாந்தில் சப்தித்துக்கொண்டிருந்தது.

---

## வெளிநாடு செல்லாது விலக்கு

வைத்தியத்துறையில் பட்டம்பெற்ற டக்றர்மார், மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆதியோரை இலங்கையை விட்டு இனிமேல் வெளிநாடுகளுக்குச் சென்று உத்தியோகம்பார்க்க அனும திப்பதில்லையென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. டக்றர்மார், எஞ்ஜினி யர்கள், தொழில்நுட்பவாதிகள் இலங் கையில் அதிகம் குறைவாயிருப்பதே இவ்வாறு முடிவுசெய்யப்படக் காரண மாகும். இந்த விலக்கு எவ்வித பாகு பாடுமின்றி அனைவர் விஷயத்திலும் அனுட்டிக்கப்படும். தொழில் நுட்ப வாதிகள் எனும்போது அத்துறையிலே பட்டம்பெற்றவர்கள் மாத்திரமல்ல, சகலவிதமான சிற்பிகள், கட்டட நிர்மாணிகள், மின்சார சம்பந்தமான தொழில் தெரிந்தவர்கள் அனைவரும் அடங்குவார்கள்.

---


## சத்தியவேத பாதுகாவலன்

### சந்தா விபரம்

வருட சந்தா

| | |
|---|---|
| இலங்கை | ரூபா 6-00 |
| வெளி நாடுக[illegible] | ,, 6-50 |
| தனிப்பிரதி | சதம் 12 |

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்த ஸ்தோத்திரம் | ... 2-00 |
| ஓடர்நிசி ( Order Nisi ) இரு முறைக்கு | ... 10-00 |

மற்றும் விபரங்களுக்குக் கடிதமூல மாகவோ அன்றேல் நேரிலோ மனுப்பண் ணிக் கொள்ளவும்.

மனேஜர்,

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## ஏழைகளின் தர்மம் ஏழைமையானதல்ல

ஆஸ்திக்காரரின்தர்மம் சந்தேகமில்லாமல் சர்வேசுரனுக்கு உகந்ததுதான். ஆனுல், ஏழைகள் கொடுக்கிறதர்மம் அதிலும் மிகமேலானது. ஏனெனில், சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறபடி, ஆஸ்திக்காரருடைய காணிக்கையைப் பார்க்கிலும் ஒரு விதவையினுடைய அரைக்காசு நமது ஆண்டவராகிய யேசுநாதருடைய கண்ணுக்கு மகாப்பிரியமாயிருந்தது. எப்படியெனில், ஆஸ்திக்காரர் தங்களுக்குமிஞ்சினபொருளைக் கொண்டு தர்மம்செய்கிருர்கள். ஏழைகளோவென்ருல், தங்களுக்கு அவசரமானதைக்கொண்டு தர்மம் செய்கிருர்கள். சிலகாலத்திற்குமுன் நிகழ்ந்த ஓர்சம்பவமாவது:

பரீஸ்நகரிலே டக்றர்ஒருவர் ஒரு ஏழைக்குடும்பத்தைப் பார்க்கப்போனுர். அப்போதுஅதிலே ஒருபெண்பிள்ளையும், மூன்று பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்களை ஆதரித்துவந்த புருஷனே கடினவியாதியாய்க் கிடந்தான். இவன் கூலிவேலைசெய்து பிழைத்தவன். அப்போது பஞ்சகாலமானதால் சம்பாத்தியம் இருக்கவில்லை, டக்றர் அந்தமனுஷனைப் பார்த்து நீயும், உன்பெண்சாதி பிள்ளைகளும் எப்படிச் சீவிக்கிறீர்களென்று கேட்க, அது ஆண்டவருக்குத்தான் தெரியும்; பசியால்வருந்துகிற ஏழைகளை அவரே காப்பாற்றுவாரென்று பதிலுரைத்தான். அக்ஷணமே ஒருவேலைகாரன் எதையோ ஒரு காகிதத்துள் மறைத்துக்கொண்டு வந்து இன்னதுரைசானி அனுப்பியிருக்கிருள் என்ருன். டக்றர் ஆச்சரியத்துடன் பார்க்க, வியாதியஸ்தன் அதைத்திறந்து அதிலே ஐந்து பிருங்குகள் இருக்கக்கண்டான். உடனே அவனுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. அப்போது குடும்பத்தாரெல்லாம்சேர்ந்து சர்வேசுரனுக்குத் தோத்திரம் செய்தார்கள். இந்தத் தர்மம் இருமடங்கு பலனுள்ளது.

எப்படியெனில், அதை அனுப்பினவள் நாள்தோறும் வேலைசெய்து 18சென்ரிம் சம்பளம்பெற்று வந்தாள். ஐந்துபிராங்குகள் மிச்சம் பிடிக்க அவள் தன்செலவை எவ்வளவோ குறைத்திருக்கவேண்டும். இருபதுவயதுள்ள இந்தஅனுதைப் பிள்ளை இவ்விதம் தர்மம்செய்தது முதல் முறையல்ல. டக்றர் இதைக்கண்டு ஆச்சரியப்பட்டுத் தனதுதலையை ஆட்டிக்கொண்டு ஆ, கத்தோலிக்க வேதமே! உன்னிடத்தில் என்ன ஆச்சரியங்களெல்லாம் நடக்கின்றது; நிர்ப்பாக்கியர்களும் மனஅமரிக்கை அடைகிருர்கள்; தன்பிழைப்புக்குப் போதுமான வகையில்லாதவளும், தர்மஞ்செய்கிருளே; நாங்கள் கொஞ்சம்கொடுத்து, அது அதிகமென்று எண்ணுகிருேம்; இவளோ ஐந்து பிராங்குகள் கொடுக்கிருளேஎன்று பிரமிப்படைந்தார்.

—*—

## தபசு மோதிரம்

— C. M. அணைக்கரை —

ஜியோவான்னிசாதாரணசிகறெற் கடைஒன்றுதான் முதலில் ரோமைநகரில் ஆரம்பித்தார். நாளடைவில் இத்தாலிநாட்டிலேயே பெரியஇறக்குமதி ஏற்றுமதி வணிகராக விளங்கினுர்.

வியாபாரம் பெருகப்பெருக அவரிடம் தெய்வசிந்தனை குறைந்தது. ஆத்துமகாரியங்களை நினைக்கக்கூட அவருக்கு நேரமில்லை. இரவு, பகல் இருபத்துநான்குமணிநேரமும் கனவிலும், கண்விழிப்பிலும் வியாபாரப் பெருக்கொன்றே அவர் எண்ணமாயிருந்தது. மனச்சாட்சியை மழுங்கவைத்துவிட்டு அதர்மவழிகளில் பொருள்சேர்த்தார். காலஓட்டத்தில் கற்புநிலைதவறி, துன்மார்க்கவாழ்விலும் சிக்கிவிட்டார்.

ரோமைநகர் ஆலயங்களில் பேர்போன சந்நியாசசபைக் குருக்கள் தபசுகாலப்பிரசங்கம்செய்துகொண்டிருந்தார்கள். ஒருவெள்ளிக்கிழமைமாலை ஜியோவான்னி தமதுகாரில் எங்கேயோ கனவேகத்தில் சென்றுகொண்டிருந்தார். ஒருகோவிலின் முன் கார்வந்தது. கோவில்நிறைந்து மக்கட்கூட்டம் வெளியிலும்நின்றது. எங்குமில்லா அமைதியும், பக்திப்பெருக்கும் நிறைந்தசூழ்நிலை நிலவியது. எதையோ நினைத்துக்கொண்டவர்போல் தமதுகாரைநிறுத்திவிட்டார் ஜியோவான்னி.

பிரசங்கத்தின் ஒவ்வொருவார்த்தையும் ஆலயத்துக்கு வெளியே தெளிவாகக்கேட்டது. கல்விட்டு எறிந்தாற்போல் அவர்நெஞ்சைத்தாக்கியது. ஜியோவான்னிகாரைவிட்டு இறங்கி மக்களோடு கலந்துகொண்டார். பத்து ஆண்டுகளுக்குப்பின் அன்றுதான் அவர் ஆலயத்துள் நுழைந்தார். கரங்குவித்து, சிரம் கவிழ்ந்து செபித்தார். கண்கள் கலங்கி நீர்உதிர்த்தன.

மறுநாள் ஜியோவான்னிபாப்பரசரிடமே பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டுமென்று வத்திக்கான் அரண்மனைக்குச் சென்ருர். பாப்பரசரின் பேட்டிகளுக்கு ஏற்பாடுசெய்யும் மொன்சிஞ்ஞோர் முதலில் ஜியோவான்னியின் வேண்டுகோளைக் கேட்டுத் திகைத்தார். ஆனுல், பாப்பரசரோ மனந்திரும்பும் பாவியின்மட்டில் கிறிஸ்துகாண்பிக்கும் பரிவோடு ஜியோவான்னியை வரவேற்ருர்.

ஜியோவான்னி ஒன்றும்ஒளியாமல் தன்பாவங்களையெல்லாம் வெளியிட்டார். பாப்பரசர் அவரைநோக்கி: "மகனே உன்பாவங்களுக்குத் தகுந்த தபசு நீ செய்யவேண்டும்; இன்றிலிருந்து ஆறுமாதம் நீதினமும் ஒரு சந்தி பிடிக்கவேண்டும்" என்ருர். சற்றுத்திணறிவிட்டார் வணிகர். "பரிசுத்த தந்தையே, அடியேனுக்கு வயிற்றுக்கோளாறு; வேறுதபசு கொடுங்கள்" என்றுகேட்டார். பாப்பரசர் நாள்தோறும் பூசைப்பலிக்கு வரும்படி கட்டளையிட்டார். ஜியோவான்னி அதையும்ஏற்றுக்கொள்ளத் தயங்கினுர். தனக்கிருக்கும் வேலைப்பளுவைக் காரணம்காட்டினுர். மூன்ருவதாக நாள்தோறும் புதியஏற்பாட்டில் ஒருஅதிகாரம் வாசிக்கும்படி கட்டளைபிறந்தது. தனக்கிருக்கும்தலைவலி வாசிப்பினுல் அதிகப்பட்டு விடும்என்று பயந்தார் பிரபு. பாப்பரசர் தமது அங்கிப்பைக்குள் இருந்து ஒரு வைரமோதிரத்தை எடுத்துப்பிரபுவிடம்நீட்டி, "மகனே, இதை அணிந்துகொள்" என்று கொடுத்தார். அந்த மோதிரத்தில் 'மெமெந்தோ மோரி' (நினைவில் கொள், நீ சாவாய்) என்ற இலத்தீன் வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருந்தன.

ஜியோவான்னிக்கு ஒன்றுமேபுரியவில்லை, பரிசுத்த தந்தைசொல்வார்: "மகனே, நாம்கொடுத்த மூன்றுவகைத்தபசும் சற்றுக் கடினமானவைகளே; இந்த மோதிரத்தை அணிந்துகொள்ள உனக்குக் கஷ்டமே இருக்காது; காலையில் கண்விழித்தவுடன் மோதிரத்தைப் பார்க்கவேண்டும்; அதில் எழுதியிருப்பதை வாசித்துக் கொஞ்சநேரம் தியானம் செய்; இதுவே நாம்கொடுக்கும் தபசுஎன்ருர். பிரபு மனநிறைவோடு ஒப்புக்கொண்டார். பாவப்பொறுத்தல் ஆசீரும்பெற்று வீடுசென்ருர்.

ஒருநாள், ஒருவாரம், ஒருமாதம், ஆறுமாதங்கள் கடந்தன. ஜியோவான்னி அடிக்கடி ஒருசந்தி பிடித்தார்; நாள்தோறும் பூசைக்குச் சென்ருர். புதிய ஏற்பாட்டில் ஒரு அதிகாரம் அல்ல. பல வாசித்தார். மோதிர வாசகம் எல்லாத் தபசுகளையும் செய்ய அவரைத் தூண்டுமென்பது பாப்பரசருக்கு ஏற்கனவே தெரிந்திருந்தது.

— ஞானதூதன்

## வணங்கிடுவோம்

மாபரன் தாய்மரியாள்—புவிதனில்
மாசின்றி உற்பவித்தாள்
தூமலர்த் தாளிணையே—துதித்துத்
தோத்திரஞ் செய்திடுவோம்

●

பேயின் சிரமிதித்தாள்—அழகில்
பிறங்கு மதிபதத்தாள்
தாயின் திருப்புகழை — அனுதினம்
தாசர்கள் பாடிடுவோம்

●

புண்ணியப் பொன்னுருவாள் — விண்ணவர்
போற்றிடும் தண்ணளியாள்
மண்ணின் தவப்பயனுள் — பதந்தனை
மக்கள் சரணடைவோம்

●

பாவியைக் காத்திடவே — மகிழ்வொடு
பக்கத் துணைபுரிவாள்
சீவியந் தந்தவளின் — திருவடி
சேவித்து வாழ்ந்திடுவோம்

●

நேசத்தின் ஊற்றணியாள் — இலங்கிடும்
நித்தியக் கன்னிமையாள்
வாச மலர்ப்பதமே — இதயங்கள்
வைத்து வணங்கிடுவோம்.

— சாந்தினி.

● இந்தியாவின் இமாலயபிரதேசங்களைச் சீனு ஆக்கிரமிப்பதையிட்டுச் சமீபத்திலே இந்தியபிரதமர்நேரு வழமைக்குமாருகக் கடுமையானஎதிர்ப்புத் தெரிவித்ததிலிருந்து இரண்டொருவருடங்களுக்குமுன் இருந்ததைக்காட்டிலும் தற்பொழுதுசீனு பலங்குன்றியிருப்பதாக அவர் கருதுகிருரெனச் சொல்லக்கூடியதாயிருக்கிறதென்று "சண்டே ரெலிகிறவ்" என்ற லண்டன் பத்திரிகை கூறுகின்றது,

● இந்தியாவும், பாகிஸ்தானும் காஷ்மீர்பிரச்சினைசம்பந்தமாய்க் கடந்த பதினுன்குவருடங்களாகத் தங்களிடையே இருந்துவரும் வேற்றுமைகளைப் பேச்சுவார்த்தைகள்மூலம் சமரசமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபையிலே பிரித்தானிய பிரதிநிதியாகிய சேர் பற்றிக் டீன் சபையில்பேசியபோது இருநாடுகளுக்கும் ஒருவேண்டுகோள் விடுத்திருக்கின்ருர்.

● காஷ்மீரைச்சேர்ந்த லடாக்பகுதியிலே சீனர்கள் 14,000 சதுரமைல் விஸ்தீரணமான தேசப்பரப்பை ஆக்கிரமித்திருப்பதாகவும், இந்தியாவின் வடகிழக்குப்பகுதியில் வேறும் 35,000 சதுரமைல் விஸ்தீரணதேசப்பரப்பை அது தன்னுடையதென்று உரிமை பாராட்டுவதாகவும் இந்திய அரசாங்கம் தெரிவிக்கின்றது.

● இஸ்ரேயேலிலே சவக்கடலின் கரைகளில் இற்றைக்கு 3,600வருடங்களுக்குமுன் வாசனைத்திரவியங்கள் வடிக்குஞ்சாலைகள் இருந்தனஎன்பதற்கான அடையாளங்கள் அங்காட்டு எபிரேய சர்வகலாசாலைப் புதைபொருள் ஆராய்ச்சியாளரான பேராசிரியர் பி. மெசார்என்பவரால் கண்டறியப்பட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

● தம்முடையபதவியிலிருந்து இளைப்பாறியிருக்கும் இந்தியஜனுதிபதி டக்றர்இராசேந்திரபிரசாத் அவர்களைக் கௌரவிக்குமுகமாக இம்மாதம்13-ந் திகதியன்று அவாதுஉருவத்தைக் கொண்ட புதியதபால்முத்திரை ஒன்று பாவனைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தமுத்திரை பதினைந்து நயா பைசாபெறுமதியுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுச் செய்திகள்

## இந்தியபுதிய ஜனாதிபதி

இந்தியக்குடியரசின் உபஜனாதிபதியாகக் கடந்த பன்னிருவருடங்களாகக் கடமையாற்றிவந்துள்ள டக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தியாவின் புதியஜனாதிபதியாக—அதாவது ராஷ்டிரபதியாகத் தெரிவு செய்யப் பெற்றிருக்கிறாரெனச் சென்ற 11-ந்திகதி வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்தியகுடியரசின் முதலாவதுஜனாதிபதியாயிருந்து இளைப்பாறிய டக்டர்இராஜேந்திரபிரசாத் அவர்களைத்தொடர்ந்து அதன் இரண்டாவது ஜனாதிபதியாக இவர் சென்றஞாயிறன்று விசுவாசப் பிரமாணஞ்செய்து, பதவியேற்று "ராஷ்டிரபதி பவன"த்தில் பிரவேசித்திருக்கின்றார். புதியஜனாதிபதி ஆந்திரப்பிரதேசத்திலே சாத்தூர் மாவட்டத்திலுள்ள திருத்தணிஎனுமிடத்தில் 1888-ம்ஆண்டு புரட்டாசி 5-ந்திகதியன்று பிறந்தார். இவர் பேரறிவும், ஆற்றலும்வாய்ந்தவர். உலகநாடுகளிலே பெருமதிப்புப்பெற்ற ஒருதமிழர். இவரின்தாய்மொழி தெலுங்காயினும் தமிழ்நாட்டிலே தமிழ்ப்பண்புடனே பிறந்துவளர்ந்தவர். தலைசிறந்த ஒருதத்துவ ஞானியும், சிறந்த சிந்தனைச்சிற்பியுமாவர். இன்றையநிலையில் புதியபதவிக்கு இவரே அதிகம்தகுதி வாய்ந்தவரென்பது எல்லோரதும் கருத்தாகும்.

---

திரு. எவ். பேதுருப்பிள்ளை அவர்கள்
அமரத்துவமடைந்த
**முதல்வருட நினைவு**



தோற்றம்: 13-5-1886 மறைவு: 18-5-1961

**செபம்**

கர்த்தாவே, இவர் தன் குற்றங்களுக்கு மன்னிப்பு அடையவும், சம்மனசுகளின்கூட்டத்தோடு சேர்க்கப்படவும் கிருபைகூர்ந்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் பேரால், ஆமென்.

எங்களால்என்றும் மறக்கக்கூடாதவிதமாய் நேசிக்கப்பட்ட எங்கள் அருமைத் தந்தை பெர்னாண்டோ பேதுருப்பிள்ளை அவர்கள் மரணித்த முதல்வருடம் 18-5-1962-ல் பூர்த்தியாகிற படியால் இதைக் கண்ணுறும் வண. குருக்கள், சங் சந்நியாசிகள், கன்னியர்கள், பந்து மித்திரர்கள் அனைவரும் இவ்வாத்தும நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

| மக்கள்: | மருமக்கள்: |
| --- | --- |
| பி. எஸ். பற்றிக் | மேரிறீற்று |
| யஸ்ரினு யோசேப்பீன் | ரெட்ணபூபதி |
| பி. சி. அன்ரனி | ஏ. ரீ. ஜெருசைரே |
| லூட்ஸ் மேரி | பி. ஜே. இம்மானுவல் |
| பி. ஜே. செபஸ்ரியன் | லூட்ஸ் மேரிதிரேசா |
| பெலிசிற்றுஸ் பேதுருப்பிள்ளை | |

மற்றும் பேரர் பேத்திமார்.

## சீனாவின் பஞ்சநிலை

சீனாவின் பொருளாதார தோல்விகளாலே அங்கு பெரும்பஞ்சம் தலைகாட்டியிருக்கின்றது. அதனால் சீன அரசாங்கம் இன்று ஆவசியகம் தீர்க்க வேண்டிய பெரும்பிரச்சினை அங்கு பஞ்சத்தையும், மக்களின்பசிபட்டினியையும் தீர்த்துவைப்பதே. இதுவிஷயமாய் வெளிநாட்டுப் பத்திரிகைகள் அற்பமாகவே செய்திகள் வெளியிடுகின்றன. ஆயினும் சீனாவின்பஞ்சநிலையை அயலிலுள்ள ஹொங்கொங், மக்காவோதீவுகளிலிருந்து நன்றாய் அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. சமீபத்தில் மக்காவோவிலிருந்து சீனா சென்றிருந்த வெளிநாட்டுத்தரிசகர்கள் குழுவொன்று கனன்நகருக்குச் செல்லும்வழியிலே அவர்கள்சென்ற பஸ்வண்டி பழுதடைந்து நின்றுவிட்டது. அவ்விதம் அதுநின்று சிலநிமிஷங்கள் செல்லாமுன்னரே பட்டினியால்வருந்திய சீனமக்கள் அதனை வளைந்துகொண்டு பஸ்ஸில் இருந்த உணவுமுழுவதையும் இரந்துகேட்டுப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாகத் திரும்பியதாகவும், பஞ்சம்தொடர்ந்து நீடிக்குமானால் கலகங்கள்ஏற்படுமென்ற அச்சம் சீனாவில் பரக்க இருந்துவருவதாகவும் இந்தத்தரிசகர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

## இந்தியபிரதமரின் எச்சரிக்கை

"இந்தியமக்கள் குடும்பகட்டுப்பாட்டை விலைகொடுத்து வாங்கமாட்டார்கள்; குடும்பகட்டுப்பாட்டுப் பிரசாரகர்களுக்கு இந்தியாவிலே மாபெரும்தடையொன்று குறுக்கிடலா"மென்று திட்டமிடப்பட்டுள்ள குடும்பகட்டுப்பாட்டுச்சங்க பிரதிநிதிகளுக்கு இந்தியபிரதமர்நேரு அன்று பேட்டியளித்துக் கூறியிருக்கின்றார். "ஒருகுழந்தை கடவுளிடமிருந்து கிடைத்த ஒருபெருங்கொடையென்று இந்தியமக்களில் மிகப்பெரும்பான்மையினர் நம்புகின்றார்கள்; அதனால் குழந்தையைப்பெறுவதிலே தலையிட்டுத்தடைபோடுகின்றவரும் கடவுளின்சித்தத்தை எதிர்க்கிறார்கள்" என்றும்கூறி அவர்எச்சரிக்கலாயினர்.

## புகைத்தலும் புற்றுநோயும்

வைத்தியநிபுணர்களது ஆராய்ச்சியின்படி சுருட்டு, சிகறெற் புகைத்தலே சுவாசப்பையில் புற்றுநோய் உண்டாவதற்குக் காரணமாகும். ஆகவே, பள்ளிச்சிறார்கள்புகைக்கும் பழக்கத்தை முற்றாகவிலக்க வேண்டுமென்று பிரித்தானிய பாடசாலைகளில் வற்புறுத்தப்படுகிறது. ஆசிரியர்களும், பெற்றோரும், வளர்த்தோரும் இவ்விஷயத்தில் தங்களைப் பொறுத்தமட்டிலும், தங்கள்பிள்ளைகளைப் பொறுத்தமட்டிலும் கூடியகவனம் எடுக்கவேண்டியவர்களாவர்.

● தேவஅன்னையின் பரித்தியாகிகள் எனப் பிலிப்பைனில் அறியப்படும் இல்லறத்தொண்டரான கன்னியாஸ்திரிகள் விமான விருந்தோம்புநர் அணியும் உடைபோன்ற துறவறஉடையணிந்துகொண்டு வானொலிநிலைய அஞ்சலராகவும், நிர்வாகிகளாகவும், உயர்தரப்பள்ளி ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றனர்.

● லாவோஸ்நாட்டில் நெருக்கடி ஏற்பட்டு அதன்பிரச்சினையிலே கம்யூனிஸ்தர்களின் ஆக்கிரமிப்பை எதிர்க்குமுகமாக அமெரிக்கஜனாதிபதி அமெரிக்க ஏழாவதுகடற்படையைத் தென்கிழக்கு ஆசியாப்பகுதிக்குச் செல்லுமாறு உத்தரவிட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தக் கடற்படையுடன் விமானப்படையும் செல்லவிருக்கிறது.

(இளைப்பாறிய ஆசிரியை)
திருமதி
செசீலியா நல்லம்மா சாமுவேல்
அவர்களின்
**அமரதின நினைவு**
**20-5-62**

அன்றுதினம்
அன்னாரின் ஆன்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
கணவர், மக்கள், மருகர், பேரர்.

"ஜினிந்தா லொட்ஜ்,
பண்டத்தரிப்பு.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3075**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெரு
1. நீக்கிலஸ் ஜேம்ஸ்ஸும்
2. மனைவி மாகிறேற்றும்

— வழக்காளிகள்.

எதிராக, சுண்டிக்குளி
1. தம்பு இறப்பியலும்
2. மனைவி கனகமணியும்
3. கார்த்திகேசு மகள் பரிமளம்
4. K. துரைசாமி
5. V. கார்த்திகேசு

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3075-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1962-ம்ஆண்டு ஜூன்மாதம் 30-ம் திகதி (30-6-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,933-92-ம். 7-10-59 தொடக்கம், 9-2-60 வரைக்கும் ரூபா 3,500-00-க்குப் 12%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும், முத்திரைச்செலவு ரூபா 51-10-ம். இதில் ரூபா 1,000-00 கொடுபட்டுவிட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி. சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி பறகுக்காடு இறை "இரக்கன் தோட்டமும், நீலந்தறையும்" நிலப்பரப்பு 3,$\frac{15}{16}$-இல் மேற்குப்பக்கமாக நிந்தமாக நிலப்பரப்பு 1,$\frac{15}{16}$ குறித்த நிலப்பரப்பு 1,$\frac{15}{16}$-க்குள் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கல்வீடும், செய்பயிர் வான்பயிர்களும், மற்றுமதற்குரிய சொத்துக்களும். இதற்கு எல்லை: கிழக்கு — பொன்னையா தம்பையாவின் மனைவி சிவபாக்கியத்துக்குரிய ஆதனம். வடக்கு—கதிரவேலு சின்னையாவுக்கும் மனைவி எலனுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு—தம்பு முத்துக்குமாருவுக்கும் பெண் அன்னமுத்துவுக்குமுரியஆதனம். தெற்கு—றெயில்பாதை. இதடங்கலும். இன்னும் பொன்னையா தம்பையாவுக்குரிய காணிக்குளிருக்கும் கிணற்றுக்குக் கிழக்கெல்லையிலுள்ள காணிக்கூடாக வழிவாய்க்கால் உரித்தும். பதிவிலக்கம் D. 245 / 261.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

இல. 19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 15-5-62.

---

**மனச்சஞ்சலத்திற்கு இடங் கொடாதே. ஏனெனில், மன அமைதியில்லாவிடில் நீ சர்வேசுரனோடு பேசமாட்டாய். நம்பிக்கையும் தளர்வடையும், நீ தேவ ஊழியத்தில் குளிர்ந்தவனாய் அசமந்தமுள்ளவனாய்ப் போகலாம்.**

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்த கூட்டமும், பொதுச்சங்கமும் இம்மாதம் 26-ந்தேதி சனிக்கிழமை நடைபெறும். ஞானஒடுக்கம் காலை 7மணிக்குச் சஞ்சுவைசயப்பர் சிற்றாலயத்தில் திவ்வியபூசையோடு ஆரம்பமாகி பி. ப. 5மணிக்குச் சற்பிரசாதஆசீர்வாதத்தோடு முடிவடையும். பொதுச்சங்கம் பி. ப. 3-30மணிக்கு இருக்கும். சபைஉத்தியோகஸ்தர்கள் தேர்தல் இருக்கும். ஆதலால், வாக்குத்தத்தம்எடுத்த சகலரும் தவறாதுசமுகங் கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

A. S. FRANCIS of MARY,
சபைக்கர்த்தருக்காக

---

## நன்றித் துதி

பிறேக்நகர திவ்வியபாலனின் இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். தீற்றம்மாள். அர்ச். பிலிப்புநேரியார், பரிசுத்த பன்னிரண்டாம்பத்திநாதபாப்பாண்டவர் இவர்களுடைய வேண்டுதலாலும் நாம் கேட்டுக்கொண்ட ஓர் வேண்டுதல் கிடைக்கப் பெற்றோம். நேர்த்திப்படி இதைப்பிரசுரம் செய்விக்கிறோம்.

எம். எஸ்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3703**

சங்கானை மேற்கு
அருணசலம் அப்பாபிள்ளை

— வழக்காளி.

எதிராக
பெரியபுலம், சுளிபுரம்
1. நாகன் வேலன்
2. பெரியன் கொத்தனும்,
3. பெண் சிதம்பரத்தியும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3703-ம் இலக்கவழக்கில்எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1962-ம்வருஷ வைகாசிமீ 26-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1,900-ம். ரூபா 1,300-க்கு 17-10-60 தொடக்கம் 6-6-61 வரை 10% வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் 5%வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 200-48சதமும். இதில் ரூபா 920 கொடுபட்டிருக்கிறது.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாகம் மேற்கு, சங்கானை கோயிற்பற்று, சுளிபுரம்இறை "பெரியபுலம்" பர. நில. இலா. மூன்றரை. வீடும், செய்பயிர் வான்பயிர்களும், பனைமரங்களும் எல்லை: கிழக்கு—அம்பலவாணசுவாமிகோயிலுக்குரியவாதனம். வடக்கு—பண்டாரி பெண் நாச்சியினுதனமும், முகப்பு ஒழுங்கையும். மேற்கு — பண்டாரி தவசியினுதனம். தெற்கு—கதிரவேலு தம்பிராசாவுக்கும், பங்காளருக்குமுரியவாதனம். வடக்கெல்லை ஆதனத்தூர்வையில் மேற்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்காலுரித்தும்.

2. ஷெ இறை "பெரியபுலம்" பர. நில இலா.இரண்டரை ($2\frac{1}{2}$).0குளி வீடும், வடலிகளும். எல்லை: கிழக்கு—பெரியன் சுப்பனினுதனம். வடக்கு—பெரியன் மரியானினுதனம். மேற்கு—அம்பலவாணசுவாமி கோவிலாதனம். தெற்கு—அருணசலம் அப்பாபிள்ளையினுதனம். வடக்கெல்லை ஆதனத்திலிருக்கும் கிணற்றுப்பங்குரிமையும், வழிவாய்க்காலுரித்தும். இரண்டுமுளஅகல றோட்டுக்குச் செல்லும் நடைபாதை போக்குவரத்துரிமையும். இதடங்கலும்.

செ. விசாகரத்தினம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
நம். 133, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
15-5-62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புதுமை செய்ய மாட்டீரோ?

தெய்வத்திருநாடாகிய பலஸ்தீனின் தலைநகராம் ஜெருசலேம் மாட்சிமையுடன் விளங்கிய நாளிலே அகுருசியென்னும் சீமாட்டி ஒருத்தி தனது ஏக குமாரத்தியுடன் பெரிய மாளிகை ஒன்றில் சகலவித பாக்கியங்களோடும் இனிதே வாழ்ந்திருந்தாள். எந்நேரமும் அவள் இல்லத்தில் ஆடலும் பாடலும், விருந்தும் வேடிக்கையும் நடந்த வண்ணமாக இருக்கும். இத்தகைய ஆனந்த குதூகலமத்தியில் அச்சீமாட்டியின் மனத்தைத் தீராக்கவலையொன்று தினமும் வாட்டிவதைத்தது.

அஃது யாதெனில், அவளுடைய ஒரேயொரு மகள் முடமாயிருந்ததே. அப்பிள்ளையின் கால் ஒன்று தரையிற் சரியாய் வைத்து நடக்க முடியாமல் கோணலுற்று இருந்தமையால் அவள் தத்தித்தத்திப் பெருஞ் சிரமத்துடன் சிறிதுதூரம்தான் நடக்கக்கூடியவள். இந்தக்காட்சி அவள் தாயான சீமாட்டிக்குப் பெரும் மனவருத்தத்தை உண்டுபண்ணியது. ஆகவே, அவள் அழகேவடிவான தனது செல்வியை அடிக்கடி நோக்கி: "என் ஆருயிர்க் குழந்தாய், என் செல்வமே, சகல சம்பத்தும், பாக்கியமும் நமக்கிருந்தும் யாது பயன்? உன்னை நோக்குந்தோறும் என் இருதயம் ஏங்கித் தயங்குகிறதே" என மொழிந்து வருந்துவாள்.

அவர்களின் மாளிகைக்குச் சற்றுத் தூரத்திலுள்ள ஒருசிறுவீட்டில் யுவாம் என்ற நடுவயதுடைய ஓர் ஆடவரும், அவருடைய தாயாரென மதிக்கத்தக்க வயதுமுதிர்ந்த ஓர் அரிவையரும் சீவித்திருந்தார்கள். இந்தஅணங்கு நெடுங்கறுப்பு முக்காடிட்டுத் துக்க வதனத்துடன் தினந்தோறும் அம்மாளிகையைக் கடந்துபோய்த் திரும்பிவருவதை அகுருசி கவனித்து, ஜெருசலேம் தேவாலயத்திற்குத்தான் அவள் சென்றுவருகிறாளென்று நினைத்திருந்தாள். ஆனால், நகருக்குப் புறம்பேயுள்ள ஒலிவந்தோட்டத்திற்கும், கல்வாரிமலைக்குமே அந்த அம்மாள் போய் வருவதாகவும், அந்தஉத்தமியின்பெயர் மரியாளென்றும், அவளுடைய மகன் யேசு ஒரு தீர்க்கதரிசியென்றும், பலநூறு நவங்கள் இயற்றிய மகானென்றும், அவரையே சிலவருடங்களுக்கு முன் கல்வாரிமலையில கொடிய யூதர்கள் குரூரமாய்க் குருசினில் அறைந்து கொன்றார்களென்றும், அப்புனிதசீலி தன் மகனுடைய ஆவியுடன் தினமும் ஊருக்குப்புறம்பே சென்று சம்பாஷித்து வருகிறாளென்றும், அவளுடைய உன்னதசலுகையால் தன் குமாரத்தியின் முடம் குணமாகுமென்றும் தனதுதாதிகள்மூலமும், பிறர்மூலமும் கேள்விப்படலானாள் அகுருசி.

அத்தகைய பெருமைவாய்ந்த மரியாள் என்ற மடந்தை ஒருநாள் தன் மாளிகைப்பக்கம் வெகுவிரைவாய்ச் சென்றுகொண்டிருக்குங்கால் அகுருசி அவ்வம்மையாரிடம் ஓடி, "அம்மணீ! என்மீது சற்று இரக்கம்பாராட்டீரோ! என் நொண்டிப் பிள்ளைக்குத் தங்கள் திருமகனை மன்றாடி ஒரு புதுமை செய்யமாட்டீரோ?" எனக் கெஞ்சினாள். அதற்குத் திருச்சுதனின் தாயார் அவளைநோக்கி: "செல்வத்திற் சிறந்த சீமாட்டியே! உன் சீவியத்தை மாற்று; உன் பாவத்திற்காக மனஸ்தாபப்படு; தபசுசெய்; உன்மகள் சுகமுறுவாள்" என அன்புடன் பணித்துவிட்டுத் தன்வழியேசெல்வாளாயினள். தபசென்பது யாதென்றறியாத அகுருசி அம்மொழிகேட்டுப் பெரிதும் திகைத்தாள்.

இதுநிகழ்ந்து சற்றேறக்குறைய ஒரு வருடத்திற்குப்பின் ஒருநாள் மாலைப்போதில் மரியம்மாள் வீட்டில் விருத்தாப்பியர்களான அநேகர் பிரவேசித்தனர். அவர்களோ சீரிய யேசுவின் சீஷர்கள். யேசுவின் திருமறையைப் போதிக்கப் பல நாடுகளுக்குஞ் சென்றிருந்தவர்கள் அன்றுதினம் அங்கே ஒருங்குகூடினார்கள்.

மறுதினம் மரியாள் இறந்துவிட்டாளென்று அகுருசி கேள்விப்பட்டாள். அப்போது அவளுடைய சப்பாணிப் பிள்ளை தன்தாயிடம் தத்தித்தத்திச்சென்று, "அம்மா! அந்தஅம்மாள் அன்று தங்களிடம் என்னவோ சொன்னார்களே; அவர் இன்று மரித்துவிட்டார்களாம்" என்றாள். இதைக்கேட்ட அகுருசியின் முகம் வேறுபட்டது. துக்கம் அவள்உள்ளத்தை வாட்டியது. அன்று தாயும்மகளும் போசனம் அருந்தவில்லை. எந்நாளும் சந்தோஷ ஆரவாரங்கள் நிரம்பியிருக்கும் அம்மாளிகையில் அந்நாள் துக்ககரமாய் இருந்தது.

பிற்பகல் நேரஞ் செல்லச்செல்ல, தெருவில் குழுமிய சனத்திரள் கணக்கிடமுடியாது. யேசு இரட்சாபெருமானால்குணமாக்கப்பெற்ற பிணியாளர்களும், முடங்கள், கூன்குருடுகள் முதலிய குறைகள் நீங்கிச் சுகம்பெற்ற பேர்களும் கூட்டங்கூட்டமாய் அங்கு நின்றார்கள். அவரது பலநூறு நவங்களைக்கண்டவர்களும், எக்காலமும் மறக்கமுடியாத அமிர்த பிரசங்கங்களைக் கேட்டவர்களுமான யூதர்களும் அங்கு பெருந்தொகையினராய்க் குழுமினார்கள். சற்குருவும், உலகஇரட்சகரும், தேவபிதாவின் திருக்குமாரனுமான யேசுவின்பக்தர்கள் ஞானகீதங்கள் பாடினார்கள், சின்னஞ்சிறார்களோ அன்றோர்நாள் கன்னிமரியாய்க்கு வானோன்கூறிய "பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே!" என்ற மங்களவார்த்தையை ஏகோபித்துப் பாடினார்கள். குறித்தநேரம் அணுகியது. மரியாயின் திருச்சடலம் வீதிவழியே பவனிசென்றது. அகுருசியென்னும் சீமாட்டி பிரேதம்வரும்வழியை நோக்கினாள். கூட்டமும் மாளிகையை நெருங்கியது. ஜெருசலேமில் அத்தகைய புனிதமான ஓர் ஊர்வலத்தை அதற்குமுன் எவரும் பார்த்ததில்லை. அகுருசி தன் மாளிகை வாசற்படியில் நின்றாள். முந்திய ஆடம்பரமான ஆடை ஆபரணதிகள், அலங்கார கோலங்கள் ஒன்றும் அப்போது அவளிடம் காணப்படவில்லை. ஒரு சாதாரண பெண்ணைப்போல நின்றாள். மரியாயின் சடலம் தன் வீட்டுவாயில்முன் வந்ததும் தான் முன்னர் தன்தலையிலும், கழுத்திலும், காதிலும் அணிந்திருந்த நவரத்தின பணிகளாகிய பூஷணங்கள் யாவற்றையும் எடுத்து, சடலத்தின் பாதத்திலே காணிக்கையாக வைத்தாள். தன் நீண்ட கருங்கூந்தலைப் பிடித்துப் பிரித்து அலங்கோலமாக்கினாள்.

"தாயே! என் அம்மணி! என்சீவியம் இன்றோடு மாறிவிட்டது" என்று உரக்கக் கூவினாள். அப்பெருமாட்டி இவ்விதகோலத்துடன் இருப்பதைக்கண்டு சனங்கள் வியப்புற்றார்கள். அருகிருந்த அவளின் முடச்சிறுமியும் "திருச்சுதனின் பேர்பெற்றதாயே! என்மீதிரங்காயோ" வெனக் கூவி மன்றாடினாள். உடனே என்ன ஆச்சரியம்! அகுருசியின்மகள், "அம்மா! அம்மா! இதோ என்கால்கள் சரியாகிவிட்டன; நான் இப்போது நன்றாக நடப்பேன்; வாருங்கள் நாம் இருவரும் இந்தநேச தாயாரின் சடலத்துடன் சென்று அடக்கத்துக்குப் போய்வருவோம்" எனத் தன்தாயை அழைத்தாள். அங்ஙனமே தாயும்மகளும் [illegible] பாஷ்பஞ் சொரி[illegible]கத்திற்குச் சென்று, தேவனையும் தேவதாயாரையும் வாயார மனமார வாழ்த்தினார்கள். அன்றுதொட்டு அவர்களின் ஆடம்பரசீவியம் வறுமைச்சீவியமாகவும், தபச்சீவியமாகவும் மாறினது.


## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| முதல்நன்மைக் குறிப்பிடம் ... | 40 |
| சிறுவர் குறிப்பிடம் ... | 60 |
| சின்னக் குறிப்பிடம் (4-ம் வ.) ... | 80 |
| ,, ,, (5-ம் வ.) ... | 80 |
| பெரிய குறிப்பிடம் (6-ம் வ.) ... | 75 |
| ,, ,, (7-ம் வ.) ... | 75 |
| ,, ,, (8-ம் வ.) ... | 75 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 05 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் ... | 05 |
| மாணவர் கிறிஸ்தவபோதகம் ... | 1-25 |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I) ... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் ... | 5-50 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 4-00 |
| ,, (தோல்) ... | 6-00 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ) ... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச்செண்டு ... | 1-00 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| நித்திய சீவியம் (தமிழ்) ... | 2-00 |
| (ஆங்கிலம்) ... | 3-00 |
| இரா ஆராதனை ... | 25 |
| திவ்வியபூசை மகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரச் சுருக்கம் ... | 05 |
| வேதாகம வாசிப்பு ... | 50 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-50 |
| அர்ச். மத்தேயு சுவிசேஷம் ... | 1-50 |
| அர்ச். மார்க்கு சுவிசேஷம் ... | 1-25 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-50 |
| அர்ச். பிலிப்புநேரியார் சரித்திரம் | 50 |
| மடு யாத்திரைக் கைத்துணை ... | 50 |
| திரு இருதய இராசாங்க ஸ்தாபனம் மட்டையில் ஒட்டிய படம் | 35 |
| மட்டையில் ஒட்டாதது | 20 |
| திருஇருதய இஸ்தாபன செபம் ... | 10 |
| சாங்கோபாங்க சுவாமிகள் ... | 1-00 |
| பசாம் (வியாகுல பிரசங்கங்கள்) ... | 1-50 |
| சிலுவைப் பாதை ... | 30 |
| சிலுவைப் பாதை (சிறியது) ... | 05 |
| சதாசகாயமாதா நவநாள் ... | 20 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 4-50 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 1-00 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) | அச்சில் |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ... | 4-75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-00 |
| தரும அப்பம் | அச்சில் |
| பத்திச் சபைகள் ... | 20 |
| ஆத்தும தரிசனம் ... | 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |

## விற்பனைக்கு!

தபசுகாலத்துக்குரிய
நிருபங்களும்
சுவிசேஷங்களும்
கிளேஸ் பேப்பர்—2-00
பைபிள் பேப்பர்—2-25

●

மூவர்ணப்பட அட்டையுடன்
அழகுற
அச்சேற்றப்பெற்ற
கைக்கடக்கமான புத்தகம்.
**சதாசகாய மாதாவைநோக்கி**
**நவதின வேண்டுதல்**
**பிரதி விலை சதம் 20.**

●

**திவ்விய பூசையில்**
**நேர்முகமாய்ப் பங்குபற்றல்**
வாசிப்பதற்கு இலகுவானமுறையில்
திருத்திஅமைக்கப்பெற்றுப்
புதிய பதிப்பாக வெளிவந்துள்ளது.
**பிரதி விலை சதம் 05.**

●

**வரப்பிரசாத நவநாள்**
**பிரதி சதம் 5.**

●

திருச்சபைப்
பொதுச்சங்கத்தின் சித்திக்காக
இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனுக்கு
செபம்
**பிரதி சதம் 3.**

●

திரு இருதயத்துக்கு
குடும்பங்களைக் காணிக்கையாக
**ஒப்புக்கொடுக்கும் செபம்**
**பிரதி சதம் 3.**

●

நல்வாசகம்
பரம்பும்படியாகச்
செபம்
**பிரதி சதம் 3.**

●

மனுக்குலத்தை
யேசுவின் திருஇருதயத்திற்கு
**ஒப்புக்கொடுக்கும் செபம்**
**பிரதி சதம் 2.**

●

**தமிழ் உறுப்புப் புத்தகம்**

| | | |
|---|---|---|
| 2-ந் தரம் | — | 30 சதம் |
| 3-ந் தரம் | — | 30 சதம் |
| 4-ந் தரம் | — | 30 சதம் |
| 5-ந் தரம் | — | 30 சதம் |

மற்றும் விபரங்களுக்கு

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

| | |
|---|---|
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் ... | 40 |
| திருச்சடங்குக் கோவை ... | 3-50 |
| ஆத்துமாக்களின்அழுகைக்குரல் ... | -500 |
| ஞானவொடுக்கப் பிரசங்கம் ... | -500 |
| இலங்கும் மகிமைமுடி ... | 30 |
| தூய கன்னிமை ... | 30 |
| அர்ச். வாரம் ... | 95 |
| தபசுகாலநிருபமும், சுவிசேஷமும் மலிவுப் பதிப்பு ... | 2-00 |
| உயர்ந்த பதிப்பு ... | 2-25 |
| பாலகயேசுவுக்குப் பெற்றோரின் காணிக்கை ... | 03 |
| நற்கருணை வீரன் ... | 05 |
| சுகிர்த செபங்கள் ... | 10 |

● தபாற்செலவு பிரத்தியேகம்.

● புஸ்தகப் பெறுமதியின் அரை வாசிப்பணம் அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

அதிபர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday May 20-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org